# அரங்கம் செய்திகள்


தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஆகஸ்ட் 16 இதழ் - 75







**நீரே எமது ஆதாரம்!**

நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட இலங்கை உள்நாட்டிலும் நீர் ஆதாரம் நிறைந்த ஒரு நாடு. மத்திய மலையகத்தில் ....

பக்கம் - 03



**“கோட்டா”இன்னும் அமெரிக்கக்குடியுரிமை**

அமெரிக்கா தமது நாட்டில் குடியுரிமையை இழந்தவர்களின் பட்டியலை மூன்று...

பக்கம் - 07



**வெவ்வேறு சட்டதிட்டங்களால் பிளவுபடும் இலங்கை**

காத்தான்குடி சவுதி நாட்டின் அமைப்பை கொண்டிருப்பது

பக்கம் -06



**கோட்டைமுனை விளையாட்டுக் கிராமத்தின் அடுத்த திட்டம்**

பக்கம் -08



# ரணில் சஜித் இருவரில் ஒருவர் வேட்பாளராகலாம்!

## இறுதி நேர முயற்சியில் அமைச்சர் மங்கள சமரவீர

--- நி.அமிர்தஸன் ---

ஜனாதிபதி வேட்பாளரை நியமிப்பது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாசவுடன் கலந்துரையாடியுள்ளார்.

இருவருக்குமிடையே தனியாகச் சந்திப்பு இடம்பெற்றதாக ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன. கட்சித் தலைவர் என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் மத்திய குழுவில் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

கரு ஜயசூரியவை ஜனாதிபதி வேட்பாளராகத் தனிப்பட்ட முறையில் ரணில் விக்கிரமசிங்க பிரேரிக்க முடியாதெனவும் சஜித் பிரேமதாச கூறியதாக கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

மத்திய குழுவை ரணில் விக்கிரமசிங்க விரைவில் கூட்டுவாரென்றும் வேட்பாளர் தெரிவு இடம்பெறுமெனவும் கூறப்படுகின்றது. இதேவேளை, கட்சியின் மத்திய குழுவில் பெரும்பான்மை ஆதரவு உள்ள ஒருவரே வேட்பாளராகத் தெரிவு

தொடர்ச்சி பக்கம்...10

# கணக்காளரும் இல்லை: பிரதேசசெலயக தரமுயர்த்தலும் இல்லை! இலவுகாத்த கிளிபோல் கல்முனைத்தமிழர் வேதனை

(காரைதீவு குறூப் நிருபர்சகா)




கல்முனைத்தமிழ்மக்களின் 30 வருடகால கோரிக்கையாகவிருந்துவந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகதரமுயர்த்தல் என்பது கிடப்பில் போடப்பட்டுவிட்டதோ என கல்முனைவாழ் தமிழ்மக்கள் இலவுகாத்த கிளிபோல அஞ்சுகிறார்கள்.

இக்கோரிக்கை அண்மையில் அங்கு இடம்பெற்ற உண்ணாவிரதத்துடன் வலுப்பெற்று தீர்வுக்கான முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்களும் இடம்பெற்றதாக ஊடகங்கள் தெரிவித்துவந்தன.
அதன் ஒரு கட்டமாக த.தே.கூட்டமைப்பு பிரதமருடன் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பிற்கு ஆதரவு தெரிவிப்பதற்காக கணக்காளரொருவர் மறுகணம் நியமிக்கப்படுவார் என்ற உறுதிமொழியினடிப்படையில் ஆதரவும் வழங்கப்பட்டது. கல்முனையில்

தொடர்ச்சி பக்கம்..15

# ஒரு வருடத்தைக் கடந்த பொத்துவில் கனகர்கிராம தமிழ் மக்களின் போராட்டம்!



காரைதீவு நிருபர் சகா

அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில் ஊறணி 60ஆம் கட்டை கனகர் கிராம மக்களின் நிலமீட்புப் போராட்டம் நேற்று முந்தினம் (14-புதன்கிழமை ) ஒரு வருடத்தை பூர்த்தி செய்துள்ளது. அதேவேளை இந்தப் போராட்டம் தொடர்கிறது.

தொடர்ச்சி பக்கம்..15


அரங்கம் செய்திகள்

அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்ய சிறப்புத் தள்ளுபடி!

கால்பக்கம் – ரூபா 2500
அரைப்பக்கம் – ரூபா 5000
முழுப்பக்கம் – ரூபா 10,000
சிறுவிளம்பரங்கள் – ரூபா 200
மாத்திரமே

## தாந்தாமலை தீர்த்தோற்சவம்



(படுவான் பாலகன்)

கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்று விளங்கும் தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய தீர்த்தோற்வம் நேற்று(15) வியாழக்கிழமை காலை ஆயிரக்கணக்கான மக்கள் புடைசூழ நடைபெற்றது.

கடந்த மாதம் 25ம் திகதி கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகி தொடர்ச்சியாக திருவிழாக்கள் நடைபெற்று வந்தன. இறுதிநாள் திருவிழா கடந்த14) புதன்கிழமை இரவு இடம்பெற்றது. இத்திருவிழாவிற்கான உபயத்தினை முனைக்காடு கிராமமக்கள் வழங்கியிருந்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் பல பாகங்களிலும் இருந்து வருகைதந்து திருவிழாவில் பங்கேற்றிருந்தனர்.

வியாழன் காலை முருகப்பெருமானுக்கு பூசை ஆராதனைகள் இடம்பெற்றதனைத் தொடர்ந்து, தாந்தாமலை முருகப்பெருமானின் புண்ணிய தீர்த்தக்குளத்தில் திருவோண நட்சத்திரத்தில் 6மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அதனைத்தொடர்ந்து பொன்னூஞ்சல் நிகழ்வும் இடம்பெற்றது.

## மது போதை : 8717 ஓட்டுனர்கள் கைது



கடந்த 24 மணிநேரத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 82 ஓட்டுனர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
மதுபோதையுடன் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கை கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமாகியது.

அதன்படி நேற்று முந்தினம் காலை 6 மணி முதல் நேற்று காலை 6 மணி வரையான கடந்த 24 மணிநேர காலத்தில் 82 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த 5 ஆம் திகதி மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் நடவடிக்கை ஆரம்பமான தினத்தில் இருந்து இதுவரை 8717 வாகன சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பதில் எந்தவித பிரச்சினையும் இல்லை



தற்பொழுது நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் எந்தவித பிரச்சினையும் இல்லை என்று இராணுவ தளபதி லெப்டினன் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகவியலாளர்கள் மத்தியில் அவர் கருத்து தெரிவிக்கையில் எதிரியின் தன்மை மாறி இருப்பாகவும் அதனை எதிர்கொள்வதற்கு இராணுவம் தொடர்ந்தும் புதிய உத்திகளை கையாண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் முறையாக தேவைக்கு அமைவாக பொதுமக்களுக்கு விடுவிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். இது தொடர்பில் எந்தவித பிரச்சினையும் இல்லை என்றும் இராணுவ தளபதி மேலும் தெரிவித்தார்.

கைது செய்யும் நடவடிக்கைகள் இன்று மட்டுமல்ல நாளையும் இடம்பெறக்கூடும். இந்த பயங்கரவாத வலைப்பின்னல் தொடர்பாக நாம் புலனாய்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். இன்றும் சந்தேக நபர்கள் இருப்பார்களாயின் நாம் கைது செய்வோம். இதன் மூலம் உலகில் அதாவது உலக நாடுகளில் முழுமையாக பாதுகாப்பு உறுதி செய்யப்படவில்லை.

திட்டமிட்ட வகையில் சர்வதேச ரீதியில் வலைப்பின்னல் ஊடாக செயற்படும் குழுவே இருக்கின்றது. இதனால் நாம் இதற்கிடையிலேயே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் பாதுகாப்பு குறித்து எந்தவித அச்சமும் கொள்ளத்தேவை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சஹ்ரானுடன் ஆயுதப் பயிற்சி பெற்ற 3 பேர் கைது

இலங்கையில் தடை செய்யப்பட்ட ஜமாதே மில்லது இப்ராஹிம் அமைப்பின் மேலும் 3 உறுப்பினர்கள் அம்பாறையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரச புலனாய்வு பிரிவினர் வழங்கிய தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்கள் நுவரெலியா மற்றும் ஹம்பாந்தோட்டையில் சஹ்ரானுடன் ஆயுத பயிற்சி பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 'இந்திய முப்படைகளுக்கும் ஒரே தலைவர்' இந்தியப் பிரதமர்



இந்தியாவின் முப்படைகளுக்கும் ஒரே தலைவர் என்ற பதவியை ஏற்படுத்தப் போவதாக இந்தியப் பிரதம மோதி இந்திய சுதந்திர தினன் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புப் படைகளின் தலைவர் என்ற ஒரு பதவியை தமது அரசு உருவாக்கும் என்று தமது சுதந்திர தின உரையில் தெரிவித்தார் மோதி.

இந்தப் பதவி, முப்படைகளுக்கு இடையில் ஒரு ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி, திறமையான தலைமையை வழங்கும் என்று அவர் அப்போது கூறினார்.

இந்திய சுதந்திர தினத்தை ஒட்டி டெல்லி செங்கோட்டையில் இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்து பிரதமர் நரேந்திர மோதி பேசும்போது இதைத் தெரிவித்தார்.



இரண்டாவது முறையாக தங்கள் அரசு பதவி ஏற்று 70 நாள்களுக்குள் சட்டப்பிரிவு 370ஐ நீக்குவது, முத்தலாக் தடை உள்ளிட்ட பல முக்கிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்றும் மோதி தெரிவித்தார்.

காஷ்மீர் குறித்து பேசிய மோதி, "சட்டப்பிரிவு 370 மற்றும் 35ஏவை ரத்து செய்தது மூலம் சர்தார் வல்லபாய் படேலின் ஒருங்கிணைந்த இந்தியா என்ற கனவை நனவாக்கி உள்ளோம்" என்றார்.

குடும்பக்கட்டுப்பாட்டை தேச பக்தியா வர்ணித்து அவர் பேசியுள்ளார்.

"தங்கள் குழந்தைகளின் கனவுகளையும், அபிலாஷைகளையும் நிறைவேற்ற அவர்களால் முடியுமா என்பது பற்றி பெற்றோர் ஆழமாக சிந்திக்கவேண்டும். மக்கள் தொகைப் பெருக்கம் பற்றி பெரிய அளவில் விவாதமும், விழிப்புணர்வும் தேவை. முறையாக குடும்பக் கட்டுப்பாடு செய்தால், சிறிய குடும்பங்களாவ் மகிழ்ச்சியாக, ஆரோக்கியமாக, மன நிறைவோடு இருக்க முடியும் என்பதைப் பார்க்க முடியும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பண்ணை விலங்குவளர்ப்பு நூல் வெளியீட்டுவிழா!



காரைதீவு விபுலாநந்தா மத்திய கல்லூரியின் விவசாய ஆசிரியர் வேலுப்பிள்ளை விஜயபவான் எழுதிய உயர்தர விவசாய விஞ்ஞான பாடத்திற்கான 'பண்ணை விலங்கு வளர்ப்பு' நூல் வெளியீட்டுவிழா கடந்த சனிக்கிழமை கல்லூரியில் கல்லூரி அதிபர் தி.வித்யாராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்நூல்வெளியீட்டுவிழாவிற்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் எம்.கே.எம்.மன்சூர் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

சிறப்பு அதிதிகளாக சம்மாந்துறை வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, கல்முனை வலய விவசாயபாட ஆசிரிய ஆலோசகர் கே.செல்வராஜா, பாடசாலையின் பிரதி அதிபர் பா.சந்திரேஸ்வரன் உதவி அதிபர் எம்.சுந்தரராஜன் ஆகியோர் கலந்துசிறப்பித்தனர்.

பணிப்பாளர் மன்சூர் அங்கு உரையாற்றுகையில்:

'இவ்வாறானதொரு கனதியான புத்தகம் வெளிவருவதுகண்டு அகமகிழ்வடைகிறேன். கிழக்கு மாகாணத்திலுள்ள 1314 பாடசாலைகளில் எந்தப்பாடசாலையாவது மண்ணின்றிய விவசாய மாதிரிச் செய்கையை காட்சிப்படுத்த முன்வந்தால் அதற்கு உதவத்தயார்' என்று கூறினார்.

## மட்டக்களப்பில் கிராம பாதுகாப்பு குழுக் கூட்டம்



ஜனாதிபதி செயலகமும் பாதுகாப்பு அமைச்சுடன் உள்ளக நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சும் இணைந்து செயல்படுத்தி வருகின்ற கிராம பாதுகாப்பு குழுக்கூட்டம் இன்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கிராம

தொடர்ச்சி பக்கம்..15

# நீரே எமது ஆதாரம்!

நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட இலங்கை உள்நாட்டிலும் நீர் ஆதாரம் நிறைந்த ஒரு நாடு. மத்திய மலையகத்தில் இருந்து ஓடிவரும் ஆடுகள் நாட்டின் அனைத்துத் திசைகளிலும் பாய்கின்றன. அது போதாதென்று நாட்டின் பல பகுதிகளில் இயற்கையாக அமைந்த நீர்நிலைகளும் கடந்த காலங்களில் பண்டைய மன்னர்களால் நிர்மாணிக்கப்பட்ட குளங்களும் நீரணைகளும் இங்கு நிறைந்து காணப்படுகின்றன.

வடக்கில் யாழ்குடா நாடு தனியாக அமைந்திருந்தாலும் நாட்டின் ஏனைய முக்கிய பகுகதிள் எங்கிலும் ஆறுகள் ஓடுகின்றன. குளங்களும் நிறைந்து காணப்படுகின்றன. இயற்கையாகவே நீர் ஆதரங்கள் நிறைந்த ஒரு வளமான மண்தான் இலங்கை.

ஆனால், நடப்பது என்ன நாட்டின் ஒரு பகுதியில் தற்போது வெள்ளப்பெருக்கும் குளங்கள் நிறைந்து பாதுகாப்புக்காக வான்கதவுகளை திறந்துவிடும் நடவடிக்கைகளும் நடக்க, மறுபுறம் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வறட்சி.

இதனை மற்றுமொரு வகையிலும் பார்க்கலாம். அதாவது நாட்டில் ஒருபகுதியில் வறட்சியான காலப்பகுதி நிலவும் நாட்டில் மறு திசையில் அதேகாலப்பகுதியில் கனமழைக்கு வாய்ப்பிருக்கிறது. ஆக இதனை இறைவன் கொடுத்த ஒரு கொடையாகவும் கொள்ளமுடியும். அதாவது மிகச்சிறிய இந்த நாட்டில் வறட்சி காணப்படும் இடங்களுக்கு அடுத்த பகுதியில் இருந்து நீரைக்கொண்டுவர வாய்ப்பிருக்குமாயின் வருடம் முழுவது நீர் வசதி நிறைந்த நாடாக இதனைப் பேணமுடியுமே.

அடுத்த ஒருவிடயமும் இங்கு நடக்கிறது. நாட்டின் பல பகுதிகளில் வருடத்தின் ஒரு பகுதியில் கனமழை பெய்து வெள்ளப்பெருக்கு, அதனால் மக்களுக்கு பாதிப்பு, அதே ஆண்டின் இன்னுமொரு காலப்பகுதியில் அதேபகுதியில் வறட்சி, மக்களுக்கு தண்ணீர் இல்லை.

ஆக, இங்கு இயற்கை தேவையான மழையை மக்களுக்கு கொடுக்கிறது. ஆனால், அதனை நிர்வாகம் செய்ய முடியாத, முயற்சிக்காத எமது போக்குத்தான் எமக்கு ஏற்படும் பாதிப்புக்கள் அனைத்துக்கும் காரணம்.

இங்கு இரண்டு விடயங்கள் அவசியமாகின்றன. அதாவது ஒரு பகுதியில் மழை பெய்யும் காலத்தில் இருக்கக்கூடிய நீர் ஏந்தும் பகுதிகளில் வசதியை, கொள்ளிடத்தை அதிகப்படுத்தி நீரைச் சேமித்து வைத்தால் வெள்ளமாகப் பெருக்கெடுத்து சேதம் ஏற்படுவதையும் தடுக்க முடியும். பின்னர், வறட்சிக்காலத்தில் தேவையான அளவு நீரை நீர் ஏந்துப் பகுதிகளில் இருந்து மக்களுக்கு பயன்படுத்த விநியோகிக்கவும் முடியும்.
இதற்கு ஆழமான திட்டமிடலும், அதன் மூலமான கட்டுமானங்களும், நீரை முகாமைத்துவம் செய்வதற்கான ஏற்பாடுகளும் தேவை. இது இல்லாமையே மட்டக்களப்பு போன்ற இடங்களில் பெருமளவு வெள்ளப்பெருக்கு ஏற்படவும் கோடைகால வறட்சியில் மக்களுக்கு போதிய நீர் இல்லாமல் போதலுக்கும் காரணம்.
அடுத்த விடயம் ஒட்டுமொத்த நாட்டுக்கான



நீர் விநியோக வலையமைப்பு. அதாவது தற்போது கன மழை பெய்யும் இடங்களில் இருந்து அதேகாலத்தில்

**சீவகன் பூபாலரட்ணம்**

வறட்சியால் வாடும் பகுதிகளுக்கு நீர் விநியோகம் செய்வதற்கான ஏற்பாடு. இது முன்னையதைவிட கொஞ்சம் பெரிய திட்டமிடலுடன் தொடர்புடையது. செலவும் கூடியது. ஆனால், மிகப்பெரிய நாடுகள் எல்லாம் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் நீரைக் கொண்டு சென்று விநியோகம் செய்யும் நிலையில், இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டுக்கு அதுவும் நடுவில் மலையும் சூழ தாழ்நிலங்களையும் கொண்ட சிறிய நாட்டுக்கு இது ஒரு சிறிய விடயந்தான்.

ஆனால், கடந்த 30 வருடங்களில் போரையும், தொடர்ச்சியான அரசியல் இழிபறிகளையும் கண்டுவரும் இலங்கைக்கு இதற்கெல்லாம் நேரம் இல்லாமல் போய்விட்டது. அதனால்தான் ஒருபுறம் வெள்ளமும் மறுபுறம் வறட்சியும் இலங்கையை தாக்குகின்றன.

மொத்தத்தில் இலங்கை முழுவதுக்குமான ஒட்டுமொத்த நீர்விநியோக, நீர் முகாமைத்துவத்திட்டம் ஒன்று தேவையாகின்றது. அந்த விடயத்தில் அரசாங்கம் மிகவும் தீவிரமான கவனம் செலுத்த வேண்டிய அவசியமும் இருக்கின்றது. இல்லாவிட்டால், இன்னும் சில வருடங்களில் நிலைமை மேலும் மோசமடையக் கூடும்.

இதுவரை அப்படியான முழுமையான திட்டத்துக்கான ஏற்பாடுகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அனைவருக்கும் இயற்கை தற்போது கொடுக்கும் வெள்ளமும் வறட்சியும் ஒரு எச்சரிக்கை மாத்திரமே. உசாராகாவிட்டால் எதிர்காலம் கேள்விக்குள்ளாகிவிடும். நீரே எமது ஆதாரம்!

# மலையகமும் நல்லாட்சியும் கற்றுத்தரும் பாடம்

தமிழர் முற்போக்கு கூட்டணியின் சார்பிலான நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலகராஜா அண்மையில் தெரிவித்த ஒரு கருத்து கிழக்கு மக்களால் ஆழ்ந்து நோக்கப்பட வேண்டிய தோன்றாகும்.

"ஒரு உப பிரதேச செயலக தரமுயர்த்தலுக்கு கிழக்கில் போராடும் போது மலையகத்தில் ஐந்து சபைகளை வென்றெடுத்துள்ளோம்." என்கின்றவாறாக அவர் உரையாற்றியுள்ளார்.

அடுத்தவர்கள் எமது சாதனைகளை முன்னுதாரணமாக எடுத்துக்காட்டி பேசுமிடத்தில் நாமில்லை என்பது இச்செய்தியின் மூலம் பகிரங்கமாவது வேதனைக்குரியதுதான். இதற்கு காரணம் நாம் பின்பற்றுகின்ற அரசியல் பாதையின் தோல்விகளே ஆகும். ஆனால் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்கின்ற வகையில் முஸ்லீம் தலைமைகளும், மலையக தலைமைகளும் சாதனைகள் புரிந்து வருகின்றார்கள். போட்டி போட்டுக்கொண்டு அபிவிருத்திகளை முன்னெடுக்கின்றார்கள். அவர்களுக்குள் யாரும் யாரையும் துரோகி என்று சொல்வதில்லை. அரசுடன் இணைந்து அதிகாரத்தில் பங்கெடுப்பதை அந்த மக்களும் வெறுப்பதில்லை. மாறாக அதையே தமது அரசியல் தலைவர்களிடம் அவர்கள் வேண்டுகின்றார்கள்.

ஆனால் நாமோ இலங்கை தேசியத்துடன் ஐக்கியமாவதை நோக்குகின்ற விதம் வேறானது. காரணம் நமது அரசியல் பாதையை வழிநடத்திய தமிழ் தேசியம் என்னும் கருத்தியலில் இருந்து நாமும் நமது தலைமைகளும் விடுபடத் தயங்கி வருகின்றோம். அதற்கு காரணம் தமிழ் தேசியம் என்பதையிட்டு நாம் தவறான புரிதல்களை கொண்டுள்ளோம். தமிழ் தேசியத்தை காப்பாற்றுவதென்பது முதலில் சமூக அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதுதான் என்பது மரபார்ந்த அரசியல் தலைமைகளால் மூடி மறைக்கப்படுகின்றது. அரசியல் தீர்வு என்பது மட்டுமே தேசியமல்ல. சமூக, பொருளாதார, கல்வி, கலாசார விடயங்களில் அபிவிவிருத்தி காணாத ஒரு இனமும் தனது தேசியத்தை வளர்க்க முடியாது. தமிழ் தேசியம் என்பதையும் இலங்கைத் தேசியத்தையும் ஒன்றுக்கொன்று எதிரானதாக நிறுத்திப்பார்க்கின்ற கருத்தியல் மாயையில் வடக்கு, கிழக்கு தமிழர்கள் மட்டுமே மூழ்கிக் கிடக்கின்றனர்.

ஆனால் இலங்கை தேசியத்திலும் அதன் அதிகார கட்டமைப்புக்களிலும் பங்கெடுப்பதன் ஊடாகவே முஸ்லீம் தேசியமும், மலையக தேசியமும் நிமிர்ந்து நிற்கின்றன. இதுவே கள யதார்த்தமாகும். மாறாக அரச அதிகாரங்களில் பங்கெடுப்பது தமிழ் தேசியத்துக்கு துரோகமானதாகும் என்றால் தேர்தல்களில் போட்டியிடுவதை நாம் நிறுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் அவையும் அரச அதிகாரத்தை நிறுவுகின்ற கட்டமைப்புக்கள்தான். ஒவ்வொரு உள்ளுராட்சி சபை உறுப்பினர்களும், ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினர்களும் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் இலங்கையின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பேன் என்று உறுதி கூறித்தான் பதவி பிரமாணம் எடுக்கின்றார்கள். அப்படியென்றால் இவைகளும் தமிழ் தேசியத்துக்கு எதிரானவைதான். ஆனால் இவற்றையெல்லாம் செய்துகொண்டு மக்களுக்குப் பணியாற்றும் பெருவாய்ப்புள்ள அமைச்சரவையிலும் அரசிலும் பங்கெடுக்க தயங்கிவருவது மட்டும் விந்தையானது மட்டுமன்றி அப்படி செய்வோரை தமிழ் தேசிய துரோகிகள் என விழிப்பதும் விசித்திரமானதாகும்.

இந்த வகையில்தான் தமிழ் தேசிய

**அறுமக்குட்டி போடி**

கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர். ஒருவகையில் தாம் முழுமையாக இலங்கை தேசியத்துடன் கலந்து விடவில்லை என்கின்ற ஒரு தோற்றத்தை வெளிக்காட்டும் முனைப்பாகும். இது ஒருவித துணைத் தேசிய உள்ளுணர்வு கொண்ட உளவியல் (sub national bias) நோயாகும்.

ஆனால் இந்த நோய்க் கூறுகள் வடக்கு கிழக்கு தமிழர்களை தவிர ஏனைய இனங்களிடம் செல்வாக்கு செலுத்துவதில்லை. எனவேதான் கடந்த காலங்களில் தொண்டமான் போன்றோரும் இன்று தமிழ் முற்போக்கு கூட்டணியினரும் அரசில் இணைந்து அமைச்சரவையில் பங்கெடுத்து வருவதன் ஊடாக வியத்தகு சாதனைகளை புரிந்து வருகின்றனர்.

இந்த நல்லாட்சி அரசில் மலையகம் குறிப்பிடத்தக்க வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. 2015ஆம் ஆண்டுதான் பாராளுமன்ற பொது தேர்தலுக்கு முன்பாக ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி மற்றும் தொழிலாளர் தேசிய காங்கிரஸ் போன்றவை இணைந்து தமிழர் முற்போக்கு கூட்டணியை உருவாக்கினார்கள். 2015ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெறப்போகும் என எதிர்பார்க்கப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியை ஆதரித்தும் அவர்களோடு இணைந்தும் போட்டியிட்டதனூடாக அதுவரை காலமும் மலையகத்தின் பெரும் அரசியல் சக்தியாக திகழ்ந்த தோட்ட தொழிலாளர் காங்கிரசை இந்த கூட்டணி ஓரம் கட்டி ஏழு உறுப்பினர்களை பெற்றனர். அதற்கு துணையாக மலையக மக்களும் தொண்டமான் தலைமையிலான தோட்ட தொழிலாளர் காங்கிரசுக்கு பல தசாப்தங்களாக வழங்கிவந்த ஆதரவை விடுத்து மாற்றுக்களை தேடி வாக்களித்தனர். அதனூடாகவே இன்று மலையகம் புதியதும் செயலூக்கம் மிக்கதுமான இளம் தலைமைகளை பெற்றுள்ளது.

'வெல்கின்ற குதிரை நம்முடையது' என்பதாக எப்படி முஸ்லீம் தலைமைகள் செயற்பட்டு அதிகார பீடங்களில் அமர்கின்றார்களோ அதேபோன்று இன்று மலையகமும் விழித்துக்கொண்டுள்ளது. தொண்டைமானின் பின்னால் தொடர்ச்சியாக முழு மலையக மக்களும் நின்றிருப்பார்களேயானால் மகிந்த தரப்பினரின் தோல்வியுடன் இன்று மலையகத்தில் அமைச்சர்கள் இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் நாமே இன்னும் ஒற்றையடிப்பாதையில் நடந்துகொண்டிருக்கின்றோம்.

தொடர்ச்சி பக்கம் 15



## சொல்லத் துணிந்தேன்! 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏமாற்று அரசியல் செயற்பாடுகளை முன்கூட்டியே அறிந்து கொண்டதால்தானோ என்னவோ மகாகவி பாரதி,

'நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி
வஞ்சனை செய்வாரடி – கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடி'

என்ற கவிதை வரிகளை வடித்தான்.

கிழக்கு மாகாணத் தமிழர்களைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் மட்டும்தானா ஏமாற்றமுடியும்? ஏன் எங்களாலும் ஏமாற்றமுடியும் என இப்போது ஒரு 'கும்பல்' புறப்பட்டிருக்கிறது. தங்களுடைய பெயர்களுக்கு முன்னால் சிரேஸ்ட சட்டத்தரணி - வைத்தியகலாநிதி – எந்திரி என்ற அடைமொழிகள் இருப்பதால் மட்டுமே தங்களைப் 'புத்திஜீவிகள்' எனப் பெயர் பொறித்துக் கொண்டு 'ஒன்றிணைந்த' அரசியல் கட்சியொன்றினை அண்மையில் கிழக்கில் அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளனர். அரசியலில் ஈடுபடப்போவதில்லை. அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளையும் கிழக்கில் ஒன்றுபடுத்துவதுதான் எங்கள் நோக்கம். ஓர் அரசசார்பற்ற நிறுவனமாகத்தான் செயற்படப் போகிறோம் என்று ஒன்றியத்தை உடைத்துக்கொண்டுபோய் ஆரம்பத்தில் கூறியவர்கள் - தங்கள் குழுவை அரசசார்பற்ற நிறுவனமாகவும் பதிவு செய்து கொண்டு பத்திரிகைகளுக்கு அறிக்கைகளும் பேட்டியும் அளித்தவர்கள்

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

அவற்றின் மை காயுமுன்னரே மக்களை முட்டாள்களாக நினைத்துக்கொண்டு தனியான அரசியல்கட்சியொன்றினை அங்குரார்ப்பணம் செய்வதில் 'ஒன்றிணைந்'துள்ளனர்.

தமிழர்களுக்கு இப்போது இருக்கின்ற கட்சிகளின் எண்ணிக்கை போதாதோ என்ற தாராள எண்ணம் புத்தியைவைத்து ஜீவிக்கும் இப் 'புத்திஜீவிக் கூட்டத்தினருக்கு வந்ததோ தெரியவில்லை.

மக்கள் நலன் சார்ந்த எந்தவிதமான தத்துவார்த்த அரசியல் தளமும் இல்லாமல் - ஒற்றுமை என்பதை 'ஊருக்கடி உபதேசம். உனக்கல்லடி' எனுமாறு உதட்டளவிலேயே உச்சரித்தவர்கள் கிழக்கிலே அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த தமிழர்களை ஒன்றிணைக்கப் போகிறோம் எனக் கூறுவது சாத்தான் வேதம் ஓதுவதற்குச் சமம். 'வாழுங்கலைப் பயிற்சிக்குப் போய்வந்தால் மட்டும் போதாது. மனதில் தூய்மை வேண்டும். அதுவும் மக்கள்பணியென்றால் சுயநலம் என்பது சொட்டும் நெருங்கக்கூடாது.

கிழக்கு மாகாணத்தமிழர்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மீது விரக்தியும் வெறுப்பும் சலிப்பும் உற்றிருக்கும் அரசியல் இடைவெளியைப் பயன்படுத்திக்கொண்டு, இடம் பிடிப்பதற்காகச் சில சுயநல அரசியல்வாதிகள் தனிக்கட்சி அமைக்கவும் கூட்டணிகள் அமைக்கவும் அண்மைக்காலமாகப் புறப்பட்டிருக்கிறார்கள். மக்களின் அறியாமையையும் அவலத்தையும் மூலதனமாகக் கொண்டு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைப் போலவே தாங்களும் ஏமாற்று அரசியல் செய்யப் புறப்பட்டுள்ள இத்தகைய தனிநபர் மற்றும் கும்பல்களையிட்டுக் கிழக்குத்தமிழர்கள் எச்சரிக்கையாகவும் விழிப்புணர்வுடனும் இருக்கவேண்டும்.

'போலி' எது? 'நிஜம்' எது? என்பதைப் பகுத்தறிந்து அடையாளம்காணும் அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கிழக்கின் அரசியல் களநிலையைப் பொறுத்தவரை கிழக்குமாகாணசபையின் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனைப் (பிள்ளையானைப்) புறந்தள்ளிவிட்டு அக்கட்சிக்குப் போட்டியாக உருவாகும் எந்தத் தனிக்கட்சியோ அல்லது கூட்டணியோ கிழக்குத் தமிழர் மத்தியிலே மேலெழும்பப் போவதில்லை.

ஏற்கெனவே கடந்தவருட இறுதிப்பகுதியில் கிழக்கில் பிள்ளையானின் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியும், டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியும், கலாநிதி எந்திரி கா.விக்னேஸ்வரன் தலைமையிலான அகில இலங்கை தமிழர் மகாசபையும் (இவை மூன்றும் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளாகும்) ஒன்றிணைந்து 'கிழக்குத்தமிழர் கூட்டமைப்பு' எனும் அரசியல் கூட்டமைப்பொன்றினைத் தேர்தல் விதிகளுக்கு அமைவாக முறையாக ஏற்படுத்தி பயணித்துக் கொண்டிருக்கிறது. இதனைக் குழப்புவதற்காகவே இப்போது 'ஒன்றிணைந்த' கட்சியென்றும், கூட்டணி என்றும் 'திருவிழாக்கடைகள் முளைக்கத்தொடங்கியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் - பின்னர் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - அடுத்து மாகாணசபைத் தேர்தல் திருவிழாக்களுக்கான கொடிகள் ஏறியுள்ளதால் அல்லது ஏற்றப்படவுள்ளதால் வழமையான அரசியல் வியாபாரம் செய்யும் நோக்குடன் முளைக்கின்ற இத்தகைய திருவிழாக்கடைகளையிட்டுக் கிழக்குத்தமிழர்கள் கவனமாக இருக்கவேண்டும்.

---

# வறட்சி நீங்க மாமழையே வாராயோ!

வெள்ளம், சூறாவளி, சுனாமி என இயற்கையின் சீற்றத்தை பார்த்தும் உணர்ந்தும் அனுபவித்த மட்டக்களப்பு, தற்போது வறட்சியால் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறது. குடி நீருக்காய் அலைந்து கொண்டிருக்கிறார்கள் மக்கள். இது தற்காலியமானதா? நிரந்தரமானதா?

உறுகாமம், வாகனேரி, நவகிரி, துண்பங்கேணி, றூகம், வெலிகாகண்டி,



வடமுனை, கட்டுமுறிவு, உன்னிச்சை போன்ற பத்து குளங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படினும் உன்னிச்சை தவிர்ந்த ஏனைய ஒன்பது குளங்களும் விவசாயத்திற்கு மட்டுமே பயன்படுகின்றன. உன்னிச்சைக் குளம் மட்டும் குடி நீருக்காகவும் விவசாயத்திற்கும் பயன்படுகிறது. மட்டக்களப்பில் உள்ள பெரிய குளம் என்பதனால் இது சாத்தியமாகியது.

இதுவரை காலமும் இவ்வாறானதோர் வறட்சியை இக்குளம் எதிர் நோக்கியதில்லை. குடிநீருக்கும் விவசாயத்திற்கும் போக மேலதிக நீர் குளத்தில் இருக்கும். தண்ணீர் பற்றாக்குறைக்கான பிரதான காரணம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் எதிர்பார்ப்பை மழை பொய்ப்பித்து விட்டது.

வழமையாக விவசாயத்திற்கு நீர் திறக்கும் போது 33 அடி நீர்மட்டம் இருக்கும், ஆனால் இம்முறை திறக்குக்கும் போது 28 அடியே இருந்துள்ளது. மழை வரும் தானே எனும் எதிர்பார்ப்பில் அவர்களும் திறந்துள்ளார்கள். மழை ஏமாற்றி விட்டது.

இதனை உணர்ந்த நீர்ப்பாசனத் திணைக்களம் ஆறாம் மாதம் 28ம் திகதியுடன் விவசாயத்திற்கான நீரை நிறுத்தி விட்டதாகவும் அதன் பின் குடி நீருக்கு மட்டும் வழங்கி வருவதாகவும், இன்றைய நீரின் அளவு நான்கு அடி எட்டு அங்குலம் உள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் திருமதி. ரவிந்திரன் குறிப்பிட்டார்.

இந்த நீர்ப் பற்றாக்குறை நிரந்தரமானதா என வினவிய போது, பருவகால மழை இன்னும் ஒரு மாதத்திற்குள் வந்துவிடும் அதன் பின் இந்நிலை தொடர வாய்ப்பில்லை என்றார்.

நீர்வழங்கல் திணைக்களத்தின் கருத்துப்படி உன்னிச்சை குளத்தில் உள்ள நீர் இன்னும் ஒன்றரை மாதத்திற்கு போதுமானது என்றும், தற்போதுள்ள நீர்வெட்டை பேணினால் இரண்டு மாதங்கள் சமாளிக்கலாம் எனவும் நீர் வழங்கல் திணைக்கள பொறியிலாளர் தினேஷ் குமார் தெரிவித்தார்.

**ச.மணிசேகரன்**

தற்போது தங்களுக்கு உன்னிச்சை குளத்தில் இருந்தும் அம்பாறையில் இருந்தும் நீர் கிடைத்துக் கொண்டு இருக்கிறது. களுவாஞ்சிகுடி, கல்லாறு, துறைநீலாவணை பிரதேசங்களுக்கு நீர் வெட்டுஇல்லை. அம்பாறையிலிருந்து வரும் நீரைப் பயன்படுத்துகிறோம்.

அதேமாதிரி மட்/ பொது வைத்தியசாலை இருப்பதனால் புளியந்தீவு பிரதேசத்திலும் நீர் வெட்டு இல்லை. ஆரையம்பதி பிரதேசத்திலிருந்து ஓட்டமாவடி பிரதேசங்கள் வரையுமே குறிப்பிட்ட நேரங்களுக்கு நீர் வெட்டு அமுல் படுத்தப்படுகிறது. பூரண நீர் வெட்டு ஏற்பட வாய்ப்பே இல்லை. எனினும் நீரை சிக்கனமாக பாவிப்பது சிறந்தது.

உன்னிச்சை குளத்தில் வழமையாக 15 அடிக்கு கீழ் நீர் மட்டம் குறைவதில்லை. இம்முறை ஐந்தடிக்கு நீர் மட்டம் சென்றதனால் பாரிய சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள். மூன்று பம்பி வேலை செய்த இடத்தில் ஒரு பம்பிதான் வேலை செய்கிறது. ஏனைய இரண்டும் வேலை செய்ய முடியவில்லை. நீர் மட்டம் குறைந்ததனால் பாசி கூடுதலாக வருகிறது. நீரை உள்ளீர்க்கும் வேகம் குறைகிறது. வழமையை விட கூடுலான அசுத்த நீராக காணப்படுவதால் கடுமையாக சுத்திகரிக்க வேண்டிய தேவைப்பாடும் உள்ளது.

முன்பு நீர் குறையக் குறைய தாங்கியில் நீர் ஏற்றப்பட்டுக் கொண்டிருப்பதால் எல்லா இடங்களுக்கும் சீராக விநியோகம் இடம் பெற்றது. தற்போது ஒருதடவை மட்டும் நீரை ஏற்றுவதால் சற்று உயர்வான இடங்களுக்கு நீர் செல்வதில்லை. இதனால் திருப்பெருந்துறை போன்ற இடங்களுக்கு வவுசரில் நீரை விநியோகம் செய்கின்றோம் என்றார்கள்.

எனினும் நீர் கட்டுப்பாட்டினால் விவசாயிகள், மேட்டு நில பயிர்ச் செய்கையாளர்கள், நன்னீர் மீன் வளர்ப்பாளர்கள், பண்ணையாளர்கள் போன்றோர் பல சிரமங்களையும் நட்டங்களையும் எதிர்நோக்குகின்றார்கள். இதேவேளை இதனை அரசியலுடன் முடிச்சுப்போட சிலர் முனைவதையும் காணலாம். காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி போன்ற நகரபிரதேசங்களில் குடிநீர் அனைத்து தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுவதும் ஒரு காரணம் என்கின்றனர்.

ஊவா பிரதேச காடுகளினூடாகவே உன்னிச்சை குளத்திற்கு பெருமளவு நீர் இதுவரை காலமும் வந்தது எனவும், தற்போது ஊவாவில் காட்டு நீரைமறித்து அணை ஒன்றை கட்டி விவசாயத்திற்கு பயன்படுத்த அவர்கள் முடிவெடுத்துள்ள காரணத்தினால், இனிவரும் காலங்களில் அடிக்கடி நீர் தட்டுப்பாடு இவ்வாறு நிகழ வாய்ப்புள்ளதாகவும் சிலர் குறிப்பிடுகின்றனர். எனினும் இதனை உத்தியோகபூர்வமாக உறுதி செய்ய முடியவில்லை.

எனினும் எமது தண்ணீர் தேசம் கண்ணீர் தேசமாக மாறாமல் விட்டால் மகிழ்ச்சியே.

# சனாதிபதித் தேர்தலில் கிழக்குத் தமிழர்களின் தெரிவு என்ன?



தற்போது சனாதிபதித் தேர்தலுக்கான திருவிழா ஆரம்பமாகி இருக்கின்றது. கட்சித் தலைவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் தங்கள் விருப்பு வெறுப்புக்கு ஏற்ற வண்ணம், எந்த இடத்தில் வியாபாரத்தைத் தொடங்கினால் அதிக இலாபங்களைப் பெறலாம், எந்த இடம் நட்டத்தை ஏற்படுத்தும் என்ற இலாப நட்டக் கணக்கில் இருக்கிறார்களே தவிர மக்கள் தங்கள் விருப்பத்துக்கு அல்லது கொடுப்பனவுக்கு ஏற்ற பலனை அனுபவிப்பார்களா என்ற அக்கறை எவருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

இலங்கையின் 'கட்சி ஆட்சி' முடிந்து கட்சித் தலைமைகளின் இலாப நட்டங்களை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளின் கூட்டு என்பது கடந்த தேர்தல்களிலிருந்து இடம்பெற்று வருகின்றது. உண்மையில் சனநாயக ஆட்சியில் இவ்வாறு கட்சிகளின் பலமான கூட்டுக்கள் மக்களின் சனநாயக வெற்றிக்கும் நல்லாட்சிக்கும் பலமாக அமையக் கூடியவை. ஆனால் இலங்கையில் இவை மக்களின் சனநாயக அடக்குமுறைக்கும் சர்வாதிகார ஆட்சிக்கும் வழிவகுப்பவையாக இருக்கின்றன. இதற்குக் காரணம் கூட்டில் இணைகின்ற கட்சிகள், கூட்டை உருவாக்குகின்ற கட்சித் தலைமைகளின் பதவிகளையும் சலுகைகளையும் பெற்று அவர்களிடம் சரணாகதி அடைந்து பதவியைக் காப்பாற்றிக் கொள்தல் என்கின்ற சுயநல அரசியலினாலாகும். இந்த சுயநல அரசியல் காரணமாக 3வது அணி என்று ஒன்றைப் பற்றி சிந்திக்கக் கூட முடியாதவர்களாக இலங்கை மக்கள் இருப்பதுதான் இந்தக் கட்சிகளின் மிகப் பெரும் பலமாகும்.

ஜே.வி.பி 3வது அணியாக தனது வேட்பாளரை நிறுத்தப் போவதாக அறிவித்திருந்தாலும் மக்கள் அந்த 3வது அணி வேட்பாளருக்கு தமது வாக்குகளை அளித்து ஒரு போட்டி அரசியலை உருவாக்குவதற்கான அரசியல் மயப்பாட்டினைக் கொண்டவர்களாக இல்லை. இலங்கையின் அரசியல் கட்டமைப்பில் 3வது அணி என்பது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் இருந்து உருவாகி வருதல் வேண்டும். அதற்கான வேலைத் திட்டங்களை மக்கள் நாட்டமுடைய அரசியல் தலைவர்கள் முன்னெடுக்க வேண்டும். அதை விடுத்து சனாதிபதித் தேர்தலுக்குத்தான் 3வது அணி என்பது 'விழலுக்கு இறைத்த நீர் போன்றது' என மக்கள் கருதி தமது வாக்கினை இரு அணிகளில் ஏதாவது ஒன்றிற்கு அளிக்கின்றனர்.

இந்த நிலையில்தான் இந்த சனாதிபதித் தேர்தல் திருவிழாவில் யாருக்கு காவடி எடுப்பது என்ற நிலையில் மக்கள் உள்ளனர்.

முதலில் கடந்த சனாதிபதித் தேர்தலின் போது ஏற்படுத்தப்பட்ட ரணில், மைத்திரி கூட்டை எடுத்துக் கொண்டால் இலங்கை அரசியல் வரலாற்றில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரு கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்ததும் அதற்கு எதிர்க்கட்சிப் போர்வையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவினை வழங்கியிருந்தும் கூட மக்கள் எதிர்பார்த்த எந்த ஒரு தேசியப் பிரச்சினையும் தீர்க்கப்படாதது மட்டுமல்ல ரணில், மைத்திரியால், மகிந்த தொடர்பாக கூறப்பட்டு வந்த ஊழல், அதிகார துஸ்பிரயோகம், ஆட்கடத்தல், கொலை என்பவை தொடர்பாக ஏதாவது ஒன்றிற்குக் கூட தண்டனை பெற்றுக்கொடுக்க முடியாத செயல்திறனற்ற ஒரு அரசாங்கமாகவும் சனாதிபதி, பிரதமர் ஆகியவர்களின் அதிகாரப் போட்டியை பரீட்சித்துப் பார்க்கும் களமாக பாராளுமன்றத்தை எடுத்து விளையாடி காலத்தைக் கடத்தியிருக்கின்றார்கள்.

**எழுவான் வேலன்**

மேற்படி அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு இம்முறை ஏற்படுத்தப் போகும் கூட்டில் சனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியிருந்தே வேட்பாளர் நிறுத்தப்படுவார் என்பது உறுதியாகி விட்டது. ஆனால் அதற்குள்ளும் சஜித் அணியினருக்கும் ரணில் அணியினருக்கும் கடும் போட்டி நிலவுவதை அவதானிக்க முடிகின்றது. பெரும்பாலும் சஜித் அவர்களே வேட்பாளராக நிறுத்தப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு நிறுத்தப்பட்டு அவர் வெற்றியீட்டுவாராக இருந்தால் இம்முறை சஜித், ரணில் மோதல் ஒன்று உருவாகலாம். சஜித் தனக்குத் கிடைக்கும் மக்கள் ஆதரவுத் தளத்தினையும் சனாதிபதி என்ற அதிகாரத்தினையும் இழந்து ரணில் போடும் தாளத்துக்கு ஆடுவார் என எதிர்பார்க்க முடியாது. சஜித்தினுடைய நோக்கம் ஐக்கிய தேசியக் கட்சியில் தனக்கு எதிரானவர்களை ஓரம் கட்டி கட்சியை முழுமையாக தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதாக இருக்கும். இதனை ரணில் எவ்வாறு சமாளித்து தன்னையும் தனது அணியினரையும் காப்பாற்றிக் கொள்ளப் போகின்றார் என்பதுவே இவர்களுடைய ஆட்சியின் முக்கிய விடயமாக இருக்கும். அத்துடன் தமிழர்களுடைய அரசியல் பிரச்சினைக்கு எவ்வாறான தீர்வை முன்வைப்பார் என்பதையும் சஜித் இதுவரைக் கூறவில்லை. இது ஏதாவது கூறி பெரும்பான்மையினத்தவரையோ அல்லது சிறுபான்மையினத்தவரையோ பகைத்துக் கொள்ளவும் விரும்பாத ஒரு நிலையினைக் காட்டுகின்றது. வெளிப்படையாகக் கூறி வந்த சந்திரிகா, மைத்திரி பொன்றவர்களால் கூட எதுவும் செய்ய முடியாது போன நிலையில் இவ்வாறு மௌனம் காத்துவருபவர் தமிழர்களுக்கு ஏதாவது செய்வார் என எதிர்பார்ப்பது முட்டாளத்தனமானதாகவே இருக்க முடியும். ஆனால் நல்லாட்சி கொண்டு வந்த ஊடகச் சுதந்திரத்தையும், பிரசைகளின் அச்சமற்ற வாழ்வையும் இது போன்றே பேணுவார் என எதிர்பார்க்கலாம்.

அடுத்து மகிந்தவினுடைய ஆட்சியையும் தற்போது அவரால் சனாதிபதி வேட்பாளராக முன்மொழியப்பட்டிருக்கும் கோதபாய ராஜபக்சவையும் எடுத்துக் கொண்டால், மகிந்தவினுடைய கடந்தகால ஆட்சி மிக மோசமான குடும்ப சர்வாதிகாரம் என்பது வெளிப்படை. ஆனால் சிங்கள மக்களுடைய நோக்கு நிலையில் செயல்திறனுடைய அரசாங்கமாகும். அந்தச் செயல்திறனுக்காக சனநாயகத்தையும் மனித உரிமைகளையும் ஊடகச் சுதந்திரத்தையும் பலிக்கடாவாக்கத் தயங்கியதில்லை என்பது கடந்தகால அனுபவங்களாகும். மகிந்தவினுடைய செயற்திறன் தமிழ் மக்களுக்கு அவரால் பலமுறை கூறப்பட்டு வந்த 13 பிளஸ் என்பதைக் கூட யுத்தம் நிறைவடைந்தும் வழங்காது தனது ஆட்சிக்காலத்தைக் கடந்தியிருந்தார். ஆனால் தான் எத்தனை முறை வேண்டுமென்றாலும் பதவிக்கு வருவதற்கு ஏற்றாற்போல் அரசியல் யாப்பை திருத்தி நிறைவேற்றிக் கொள்ள அவர் தயங்கவில்லை. சென்ற முறை சனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற போதும் முன்னைய சனாதிபதிகள் போல் அரசியலில் இருந்து ஒதுங்காது தான் வகித்த அதி உயர் பதவி, அதன் கௌரவம், அந்தஸ்த்து என்பவற்றையெல்லாம் பொருட்படுத்தாது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு ஒரு சாதாரண பாராளுமன்ற உறுப்பினராக இருந்து தனது அதிகாரத்துக்காக பெரும் அரசியல் புரட்சிகளைச் செய்து கொண்டிருக்கிறவர் என்பதை மக்கள் மறந்து விடக்கூடாது.

ஏப்ரல் 21 குண்டுவெடிப்புக்குப் பின்னர் பௌத்த பேரினவாதத்தின் ஒப்பற்ற தலைவர்களாக மகிந்த குடும்ப உறுப்பினர்கள் மேற்கிளம்பியிருக்கின்றார்கள். அந்தக் குடும்பத்தின் சாரதியாக மகிந்த வீற்றிருக்கின்றார். மகிந்த பேரினவாதத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றாரா அல்லது மகிந்தவை பேரினவாதம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றதா என யாராவது வினவினால், பேரினவாதம்தான் மகிந்தவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது என்பதே உண்மையாகும். இன்று அவர் தேர்தலுக்கு தயாராவது அந்தப் பேரினவாதத்தின் நம்பிக்கையில்தான். அந்தப் பேரினவாதத்தின் விருப்பு வெறுப்புக்களை எதிர்த்துக்கொண்டு அவர் சிறுபான்மையினருக்கான உரிமைகளை வழங்குவார் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் தனக்குப் பின்னரும் தனது குடும்ப ஆட்சி நிலைபேறுடையதாக இருக்க வேண்டும் என்றால் அதற்காக அவர் சிறுபான்மையினர் விடயத்தில் கால இழுத்தடிப்பையே மேற்கொள்வார் என்பதில் சந்தேகமில்லை.

மேலும் மகிந்தவினால் முன்னிறுத்தப்பட்டுள்ள கோத்தபாயா அவர்கள் அரசியலுக்கூடாக வராதவர். இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றபின்னர் பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றியவர். எனவே அவருடைய நடத்தையில் ஒரு இராணுவத்தனம் இருக்கும் என்பது பலருடைய அச்சமாக இருக்கின்றது. இந்த இராணுவத்தனம் கடினமான விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமையும். ஆனால் அந்தத் திறனை தமிழர்கள் கோருகின்ற அரசியல் தீர்வு விடயத்தில் பயன்டுத்துவாரா என்றால் நிட்சயமாக இல்லை என்பதே பதிலாகும். அவர் மிகத் தெளிவாக கூறியிருக்கின்றார் 13வது சீர்திருத்தத்தை தற்போதைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் தவிர்த்து நடைமுறைப்படுத்துவதற்கு தன்னால் முடியும் என்றும் பயங்கரவாதத்தினையும் அடிப்படைவாதத்தினையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதாகவும் கூறியிருக்கின்றார்.

கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை இஸ்லாமிய அடிப்படைவாதத்தினை, பௌத்த பேரினவாதத்தை விட ஆபத்தானதாக அவர்கள் தற்போதைக்கு உணர்கிறார்கள். இவ்வாறான உணர்வு நிலை தனியே ஒரு சஹ்ரானின் குண்டு வெடிப்பினால் வந்ததல்ல. யுத்தகாலம் முதல் அரசின் செல்லப்பிள்ளைகளாக இருந்து தமிழர்களுக்குச் செய்த துரோகத்தனங்களாலும் ஹிஸ்புல்லா, பாராளுமன்ற உறுப்பினரான ஹரிஸ், போன்றவர்கள் தமிழர்களுக்கு எதிராக தெரிவித்து வரும் கருத்துகளும் செயற்பாடுகளும், தமிழர்களின் பாரம்பரிய காணிகளை அரசியல் செல்வாக்கினால் அபகரித்துக் கொள்ளும் வழிமுறைகளாலும் முஸ்லிம் பகுதிகளுக்கு தொழிலுக்குச் செல்லும் ஏழைத் தமிழர்களை இஸ்லாமியர்களாக மதம் மாற்றுவதனாலும் முஸ்லிம்கள் மேல் தமிழர்களுக்கு ஒரு வெறுப்புணர் ஏற்பட்டிருக்கின்றது என்பதை எவரும் மறுத்துவிடமுடியாது.

எனவே தமிழர்களுக்கு இரண்டு விதமான பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று கிழக்குத் தமிழர்களின் இருப்பை தக்கவைத்தல். அடுத்தது தமிழர்களின் நீண்டகால அரசியல் கோரிக்கைக்கு தீர்வு காணல் என்பதாகும். தமிழ்த் தலைமைகள் தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணல் எனும் விடயத்தில் கவனம் செலுத்தி கிழக்குத் தமிழர்களின் இருப்பை கேள்விக்குறியாக்கியே வந்துள்ளார்கள். இம்முறை அந்த அணுகுமுறையினை விடுத்து கிழக்குத் தமிழர்களின் இருப்பை பாதுகாத்துக் கொண்டு நிரந்தர தீர்வுக்குப் பதிலாக தற்காலிக தீர்வுகளை ஏற்றுக் கொண்டு அதில் பெரும்பான்மையினத்துக்கு நம்பிக்கையினை ஏற்படுத்தி நியாயமான பிரச்சினைகளை முன்னிறுத்தி படிப்படியாக நிரந்தர அரசியல் தீர்வை

தொடர்ச்சி பக்கம் 15

# வருகையின் நோக்கம்தான் என்ன?

இந்த வாரம் ஒரு பரபரப்பாகவே நகர்கிறது. ஒன்று பொது ஜன பெரமுன தனது சனாதிபதி வேட்பாளராக கோத்தபாயாவை அறிவித்ததும் அதன் தலைமைப் பொறுப்பை மகிந்த ஏற்றுக் கொண்டமையும், இரண்டாவதாக ஐ.தே.க சனாதிபதி வேட்பாளரை அறிவிக்க தடுமாறுவதையும் சஜீத் தனது ஆதரவு மாகாநாட்டை பதுளையில் கூட்டி தலைமைக்கு நெருக்கடியை கொடுத்தமையும் தொடர்ந்து அது கண்டி, மாத்தறை என நீள்வதாலும் தென்னிலங்கையில் பரபரப்பு சூழல் நிலவ,

மூன்றாவது கிழக்கில் த.தே.கூட்டமைப்பு மீது விமர்சனங்களும் அதிருப்திகளும் கட்சிக்குள்ளும் வெளியிலும் தொடர்ந்து நீடித்து கொதிநிலையில் இருக்க, தேர்தல்கள் நெருங்கும் காலங்களில் அவ்வளவு நல்லதல்ல எனும் வகையில் அதனை குறைக்கும் வகையில் விழிப்புணர்வுக் கூட்டங்கள் பட்டிருப்பு, கற்குடா தேர்தல் தொகுதிகளிலும் அம்பாறை மாவட்டத்திலும் மட்டு கட்சி அலுவலகத்திலும் நடந்தேறியது.

இதற்காக ஊடக பேச்சாளர் சுமந்திரன் அவர்கள் வருகை தந்து கட்சி முக்கியஸ்தர்களும் உள்ளூராட்சி உறுப்பினர்களும் தீவிர ஆதரவாளர்களும் அழைக்கப்பட்டு விளக்கவுரை ஆற்றப்பட்டது. சந்தேகங்கள், கேள்விகள் எழுத்து மூலம் கோரப்பட்டு, அவற்றிக்கான பதில்கள் சுமந்திரனின் பேச்சினூடே வழங்கப்பட்டன.

கூட்டத்தில் கட்சிப் பிரமுகர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், தீவிர ஆதரவாளர்கள், இனிவரும் தேர்தல்களில் ஆசனங்களை எதிர்பார்க்கும் பிரமுகர்கள் என விசுவாசிகளையே காணக்கிடைத்தது. பொதுவான பொது மக்களின் வருகை நிகழவில்லை.

சுமந்திரனின் உரையானது பலதையும் கொண்டதாகவும் இருந்த அதேவேளை, இது விசுவாசிகளை ஓரளவு திருப்திப்படுத்தும் வகையில் அமைந்திருந்து என்றே கருதக்கூடியதாகவும் இருந்தது. கூட்டத்தில் இருந்த அமைதியும் தலையாட்டுதல்களையும் சாதகமாகக் கொள்ளலாம். கூட்டமைப்பை நோக்கி எறியப்படும் கணைகளுக்கு பதில்களை தயாரிக்கக் கூடிய புள்ளிகளை தேடும் மனநிலையே பல விசுவாசிகளிடம் காணப்பட்டது. களுவாஞ்சிகுடியில் அரியநேத்திரனின் ஆரம்ப உரையே இதற்கு கட்டியம் கூறியது. கிழக்கு மாகாண சபையை முஸ்லிம் காங்கிரசிடம் விட்டுக் கொடுக்கவில்லை. பதினொன்றுக்கு ஏழு அல்ல நான்கு கட்சிகளின் கூட்டு என்ற சப்பைக் கட்டு விளக்கம்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம்தான் பெரும்பாலானோரின் எதிர்பார்ப்பாக இருந்தது. சுமந்திரனின் பதில் விசுவாசிகளை திருப்திப்படுத்தியதோ இல்லையோ, மட்டக்களப்பு பொது மக்களுக்கு உவப்பாக இருக்கவில்லை, சுமந்திரனின் உரை ஊடகங்களில் வெளிவர, உடனே

**வ.ச.முரளீசேகரன்**

அதனைப் பார்த்த ஹாரிஸ் எம்பியின் பதில்கள் தற்போது ஊடகங்களில் வந்துகொண்டிருக்கின்றன. ஹரிஸ் எம்பி கூட்டத்தில் பேசிய பேச்சே அதற்குச் சான்று.

என்னதான் இருந்தாலும் ரணில் அரசாங்கம் முஸ்லிம் தரப்பை மீறி எந்தவொரு சந்தர்ப்பங்களிலும் தமிழர் தரப்பிற்கு ஒன்றும் தராது. இது சுமந்திரனுக்கு புரிந்ததா? உண்மையில் புரியவில்லையா? யாமறியோம். இவ்வாறுதான் கணக்காளர் வருவார் என்றார்கள், ஹரிஸ் வரமாட்டார் என்றார், இறுதியில் ரணில் நமக்கு கணக்கு விட்டு விட்டார்.

இது கட்சிக் கூட்டம்தான், எனினும் கூட்டம் ஒரு கலந்துரையாடலாக, கருத்துப் பரிமாற்ற அரங்காக, தங்கள் கட்சியைத் தாங்களே சுய விமர்சனம் செய்து கொள்ளும் திறந்த வெளியாக அமைந்திருக்க வேண்டும். மாறாக எழுதப்பட்ட வினாக்களுக்கு அளிக்கப்பட்ட தனி மனித உரைதான் விடையாகக் கொள்ளப்பட்டது. கேள்விகள் வெளிப்படையாக வாசிக்கப்படவில்லை. உண்மையில் என்ன கேள்விகள் எழுதப்பட்டன, எத்தனை கேள்விகள் எழுதப்பட்டன என்ற வெளிப்படைத் தன்மை பேணப்படவில்லை.

சூடு பிடிக்கத் தொடங்கியுள்ள சனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பதை பூடகமாக தெரிவித்தார். எக்காரணம் கொண்டும் எக் காலத்திலும் கோத்தாவிற்கு ஆதரவு இல்லை. எதிரணி வேட்பாளர்கள் யார் யார் என தெரிவதற்கு முன்பே, தமிழ் மக்களின் கோரிக்கைகளை முன்வைப்பதற்கு முன்பே தீர்மானங்களைத் திணிப்பதும் நியாயங்களைத் தேடுவதற்குமாகவே கிழக்கை நோக்கிய சுமந்திரனின் வருகை அமைந்ததோ?

---

# வெவ்வேறு சட்டதிட்டங்களால் பிளவுபடும் இலங்கை

காத்தான்குடி சவுதி நாட்டின் அமைப்பை கொண்டிருப்பது பலருக்கு கண்ணை உறுத்துகின்றது . பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட ஈச்சமரம் நட்டதைப் பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. உலகத்தில் பல நாடுகளில், உதாரணமாக சிங்கபூர், மலேசியா, ஐக்கிய ராஜ்ஜியம் போன்ற நாடுகளில் லிட்டில் இந்தியா உள்ளது, சீனா டவுன் உள்ளது, லண்டனில் அராபியர் தெரு உள்ளது. ஏன் இலங்கையில் காத்தான்குடியில் லிட்டில் சவுதி இருக்ககூடாது என்று நான் நினைத்ததுண்டு. ஆனால் நான் மேல் குறிபிட்ட நாடுகளில் அவர்கள் தங்களுக்கென்று தெருக்களை அமைத்து அங்கே கிடைக்கும் உணவு, உடை தெரிவின் வடிவமைப்பு போன்றவை இருந்தாலும் சட்டதிட்டம் என்று வரும்போது அந்த நாட்டின் சட்டதிட்டங்களிலேயே வாழ்கின்றனர்.

ஆனால் காத்தான்குடியில் அவ்வாறு இல்லை. இலங்கை பூராவும் ஞாயிறு விடுமுறை, ஆனால் முஸ்லிம் பிரதேசங்களில் வெள்ளி விடுதலை சவுதி போல, வீதி ஒழுங்கு காத்தான்குடிக்கு மட்டும் தனியோ என்று பலர் என்னிடம் குறைப்பட்டதுண்டு. அங்கே இலங்கையின் பொதுச் சட்டம் செல்லுபடி ஆவதில்லை என்ற சந்தேகம் பலருக்கு உள்ளது. இங்கேதான் பிரச்சினை ஆரம்பமாகிறது. அரசியல் யாப்பில் சட்டத்தின் முன் யாவரும் சமம், ஆனால் ஒரு இனத்தவருக்கு சட்டம் வேறு விதம் என்றால் எப்படி?

இதேபோல் இஸ்லாமிய பெண் விவாகரத்து பெற வேண்டுமாயின் அவள் மூன்று மாதங்கள் வெளியில் போகாமல் வீட்டினுள் இருக்க வேண்டும். இதுவே அரச அல்லது அரச சார்பற்ற தனியார் தொழில் செய்பவளாக இருந்தால் சம்பளத்துடன் அல்லது இல்லாமல் அவளுக்கு மூன்று மாத விடுமுறை கொடுக்கவேண்டும். அரச திணைக்களங்களும் தனியார்துறைகளும் இந்த வசதியை முஸ்லிம்களுக்கு வழங்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இந்த சலுகை வேறு ஏதும் காரணங்களுக்காக மற்றைய இன பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. இது சமூகத்தில் பிரச்சினையை உருவாக்குகின்றது. முஸ்லிம் சட்டத்தின் கீழ் திருமணமான பெண்ணுக்குத்தான் இந்த வரப்பிரசாதங்கள், முஸ்லிம் பெண்களுக்கு மட்டும் கொடுப்பதை ஏற்று கொள்ள முடியாது. இது ஏற்ற தாழ்வை உருவாக்குகின்றது.

பொதுச்சட்டத்தில் திருமணம் ஆன தமிழ், சிங்கள ஆண்கள், மறுபடியும் முஸ்லிம் பெண்ணை முஸ்லிம் மதத்துக்கு மாறி முஸ்லிம் சட்டப்படி திருமணம் செய்கிறார். இது நடக்கிறது. பொதுச் சட்டத்தின்கீழ் திருமணமான ஆண் சட்டபூர்வமாக விவாகரத்து பண்ணாமல் இன்னொரு பெண்ணை திருமணம் செய்வது தண்டனைக்குரிய குற்றம், ஆனால் முஸ்லிம் சட்டபடி திருமணம் நடக்கிறது. மதம் மாறி பெயர் மாற்றம் பெற்று திருமணம் செய்கின்றனர். இதை இஸ்லாமிய விவாகப் பதிவாளர்கள் செய்கின்றனர். திருமணத்தை நடாத்தி வைக்கின்றனர். இது எவ்வகையில் நியாயமாகும்? நீதியும் நேர்மையும் இருந்தால் இஸ்லாமியப் பெண்ணை மதம் மாறி திருமணம் செய்யும் ஆடவன், ஏற்கனவே திருமணமானவனாக இருக்கும் பட்சத்தில் அவனை வற்புறுத்தி விவாகரத்து பெற்று கொண்டுவா என்று சொல்லவேண்டியது பள்ளிவாசல் மற்றும் பதிவாளரின் கடமை அல்லவா?

இரண்டு பிள்ளைகளின் தந்தையான தமிழ் மகன் சவூதிக்கு போன பின் மனைவியுடன் தொடர்பு இருக்கவில்லை, அவளும் தேடாத இடம் இல்லை. அண்மையில் வேறு ஒரு மாவட்டத்தில் இருந்து அவர் இறந்து விட்டதாக செய்தி வந்தது, ஓடிப் போனாள், அவர் முஸ்லிம் மதத்துக்கு மாறி, தன்னுடைய பெயரையும் மாற்றி, ஒரு இஸ்லாமியப் பெண்ணை இஸ்லாமிய முறைப்படி திருமணம் செய்து மூன்றரை வயதில் குழந்தையும் உண்டு. இப்போது பிரச்சினை என்னவென்றால், தமிழ் மனைவிக்கு இறப்பு சான்றிதழ் தேவைப்படுகிறது. இறப்பு சான்றிதழில் பதியப்படும் பெயரும் அவரின் உண்மை பெயரும் மாறுபடுகிறது. இங்கே குற்றம் ஒன்று ஏற்கனவே திருமணம் செய்தவனுக்கு வேறு ஒரு திருமணம் இஸ்லாமிய முறைப்படி செய்து இருப்பது, பெயர் மாற்றம் இரண்டாவது பிரச்சினை. இலங்கையில் பெயர் மாற்றம் செய்வதற்கு அவர் வாழ்ந்த கிராம சேவகர், பிரதேச செயலர் கடிதங்கள் தேவை, இவ்வாறு இருந்தும் வேறு

**நளினி ரட்ணராஜா**

மாவட்டத்தில் இருந்து கிராம சேவகர் இந்த மாதிரியான செயலை செய்திருப்பது தண்டனைக்குரிய குற்றம். வெவ்வேறு திருமணச் சட்டங்கள் ஒரு நாட்டில் இருப்பதன் விளைவுதான் இது. இப்படி இருப்பதனால் தமிழ், சிங்கள பெண்கள் மிகவும் துன்பத்துக்கு ஆளாகின்றனர்.

இதேபோல் இந்த ஆடை பிரச்சனை புதிதாக தலைதூக்கி உள்ளது. அரசாங்க திணைக்களங்கள் பாடசாலைகளில் அரச வங்கிகளில் பணிபுரிபவர்கள் இப்படித்தான் உடை உடுக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டு. விரும்பியோ விரும்பாமலோ அந்த கட்டுப்பாடுகளை நாம் பின்பற்றியே ஆக வேண்டும். உடை அணிவது அவரவர் உரிமையையும் சௌகரியத்தையும் பொறுத்தது. இஸ்லாமிய பெண்களுக்கு விரும்பியதைத்தான் அவர்கள் உடுத்துவோம் என்றால் அதுபோல் தமிழ் பெண்களுக்கும் வழங்கப்படவேண்டும். ஏன் நாங்கள் மட்டும் சுற்று நிருப சட்டதிட்டப்படி உடுக்கவேண்டும். சேலை மிகவும் அசௌகரியமான உடை . ஆகவே நாங்களும் சல்வார், பாவாடை சட்டை அல்லது ஜீன்ஸ் பாண்ட் போட அரசு ஆவன செய்ய வேண்டும்.

குறிப்பாக இஸ்லாமியருக்கு தங்களுடைய மார்க்கத்தின் படி நடக்க அவர்களுக்கு உரிமை உண்டு. உங்களுக்கு வேறுபட்ட திருமணச் சட்டங்கள் இருந்தால் அதை ஒழுங்காக நேர்மையாக நடைமுறைப்படுத்துங்கள் கண்காணியுங்கள், யாராவது குற்றம் செய்தால் தயவு தாட்சண்யம் இன்றி நீதியின் முன் நிறுத்துங்கள். காதி நீதிமன்றங்களும் நடைமுறைகளும் நீதியை நிலை நாட்ட முயலவேண்டும். அநியாயங்கள் அரங்கேறுகின்றன. குறிப்பாக பெண்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மூவினமும் வாழும் நாட்டில் சட்டம் ஒழுங்கு கட்டுப்பாடு எல்லாம் சாதி மதம் கடந்து எல்லோருக்கும் ஒன்றாகவே இருக்க வேண்டும். ஒரு இனத்துக்கு மட்டும் சட்டத்தின் மூலம் பிரத்தியேக சலுகைகள், உரிமைகள் வழங்குதல் பாரபட்சங்களை உண்டு பண்ணுகின்ற விடயம். இஸ்லாமியரின் சட்டங்கள், உரிமைகள் விழுமியங்கள் மற்றவரின் உரிமையை பாதிப்பதை ஒருக்காலும் அனுமதிக்க முடியாது. இது சமூக நல்லிணக்கத்தைப் பாதிக்கும். நாட்டின் அபிவிருத்தியை பாதிக்கும். இதை எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும். இப்படி இஸ்லாமியரின் வாழ்க்கை முறையும் சட்டதிட்டங்களும் மற்றைய இனத்தவரின் உரிமைகளைப் பறித்து மற்றவர்களின் வாழ்க்கையை பாதிக்காமல் இருப்பதற்கான முழுப்பொறுப்பையும் முஸ்லிம் சமூகம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.



# பட்டறிவு

## “கோட்டா” இன்னும் அமெரிக்கக்குடியுரிமையைஇழக்கவில்லை இன்றையஅமெரிக்கஆதாரம்



அமெரிக்கா தமது நாட்டில் குடியுரிமையை இழந்தவர்களின் பட்டியலை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை என வருடத்துக்கு நான்கு தடவைகள் வெளியிடுவது வழக்கம். இந்த வருடம் ஏற்கெனவே வெளியிடப்பட்டிருந்த பட்டியலில் கோட்டபாயவின் பெயர் இருக்கவில்லை. ஆனால் தனது குடியுரிமையை ரத்து செய்வதற்கான விண்ணப்பத்தை எப்போதோ செய்துவிட்டதாகவும் தற்போது அமெரிக்க குடியுரிமையை இழந்துவிட்டதாகவும் கோட்டபாய கூறிவந்தார். எதிர்தரப்பினர் அவரின் அந்த அறிவிப்புக்குச் சவால் விடுத்து வந்தனர். முடிந்தால் அதனை வெளிப்படுத்துமாறு கேட்டிருந்தார்கள். ஆனால் அது தன்னிடம் இருப்பதாகவும் அதனைக் காட்டவேண்டிய அவசியம் இல்லையென்றும் கோட்டாபய கூறியிருந்தார். இலங்கையின் ஜனாதிபதித்தேர்தல் அறிவிப்பதற்கு முன்னர் வெளிவரப்போகும் அமெரிக்க அறிக்கையில் கோட்டபாயவின் பெயர் வெளியிடப்படலாம் என்றே எல்லோரும் நம்பியிருந்தனர். இந்த நிலையில் வியாழனன்று அதாவது 15.08.2019 வெளியிடப்பட்டிருக்கிற 17 பக்கங்களைக் கொண்ட இறுதிப் பட்டியலில் கோட்டபாயவின் பெயர் வெளியாகவில்லை.

இலங்கையின் அரசியல் அமைப்பின் 19வது திருத்தச் சட்டத்துக்கு அமைய இலங்கைப் பிரஜை ஒருவர் மட்டுமே ஜனாதிபதி வேட்பாளராக ஆக முடியும். ஒன்றுக்கு மேற்பட்ட குடியுரிமை பெற்ற எவரும் தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழந்தவராகக் கணிக்கப்படுவார்.

ராஜபச்க தரப்பைப் பொறுத்தளவில் வெற்றி பெறக்கூடிய வேட்பாளராக “நந்தசேன கோட்டபாய ராஜபக்ச”வைத் தான் நம்பியிருகின்றனர். அதற்கான ஆயத்தங்களை அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கிவிட்டபோதும் கோட்டபாய அமெரிக்க குடியுரிமையையும் கொண்ட ஒருவராக இருப்பதால் அவரை முதலில் அக்குடியுரிமையை ரத்துசெய்துவிட்டு வரும்படி ராஜபக்ச அணியினர் தெரிவித்திருந்தனர்.

**என்.சரவணன்**

ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரைத் தான் களமிறக்க வேண்டும் என்பதே ராஜபக்ச தரப்பினரின் ஒரே லட்சியம். ஆனால் 19வது திருத்தச் சட்டம் அவர்களின் அந்தக் கனவைக் கலைத்திருந்தது.

19வது திருத்தச்சட்டத்தில் முக்கிய மூன்று திருத்தங்கள் ராஜபக்ச குடும்பத்தின் எதிர்கால கனவை நாசமாக்குவதற்காகவே கொண்டுவரப்பட்டதாக குற்றச்சாட்டு உண்டு. ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதியாக ஆக முடியாது. அதாவது மகிந்தவால் மீண்டும் ஜனாதிபதியாக முடியாது. இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் தேர்தலில் போட்டியிடமுடியாது. அதாவது கோத்தபாய, பசில் ஆகிய மகிந்தவின் இரு சகோதர்களும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. மகிந்தவின் மகனை ஜனாதிபதித் தேர்தலில் நிற்கவைக்கவும் முடியாது. ஏனென்றால் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் 35 வயதைத் தாண்டியிருக்கவேண்டும் என்பது அரசியலமைப்பு விதி. 2015 வரை வயதெல்லை 30ஆக இருந்தது. 1986இல் பிறந்த நாமல் ராஜபக்ச 35 வயதைக் கடக்க 2021 ஆக வேண்டும். 2019 ஜனாதிபதித் தேர்தலில் நாமல் பங்குபெறமுடியாது. அதாவது 2024 ஆம் ஆண்டு இறுதியில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தான் பங்குபெறலாம். அல்லது 2021குப் பின்னர் ஜனாதிபதி பதவி வெற்றிடம் ஏற்படவேண்டும் வேண்டும். இந்த இடைக்காலத்துக்குள் “ராஜபக்சவாத”த்துக்கான மக்கள் மவுசுக்கு என்ன நிகழும் என்றும் தெரியாது.

அமெரிக்காவின் அறிக்கை வெளிவரும் வரை ஜனாதிபதி வேட்பாளராக கொட்டாபயவின் பெயரை அறிவிப்பதை இழுத்தடித்தே வந்த ராஜபக்ச தரப்பு ஒகஸ்ட் 11 வேறு வழியின்றி கோட்டாபயவின் பெயரை அறிவித்தனர். வரப்போகும் அமெரிக்க அறிக்கையை அவர்கள் பெரிதும் நம்பியிருந்தனர். ஆனால் இன்றைய அறிக்கை அந்த கனவுகளுக்கு ஆப்பு வைத்து விட்டதாக கருதப்படுகின்றது.

அமெரிக்க உள்துறை வருமான சேவை (IRS - Internal Revenue Service) தான் இந்த அறிக்கையை வெளியிடும் அதிகாரபூர்வமான உரிமையைக் கொண்டது. 2019-17498 என்கிற இலக்கத்தைக் கொண்ட இன்றைய அதிகார பூர்வமான அறிக்கையை https://s3.amazonaws.com/public-inspection.federalregister.gov/2019-17498.pdf என்கிற இணைப்பில் நீங்கள் காணலாம்.

இரட்டைக் குடியுரிமையைக் கொண்ட ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் இலங்கையின் எந்தவொரு பிரஜையும் அதை எதிர்த்து வழக்கு தொடர முடியும் என்று (PAFFREL - PEOPLE'S ACTION FOR FREE & FAIR ELECTIONS) இயக்கம் அறிவித்திருக்கிறது. வேட்புமனுத் தாக்கல் இடம்பெற்றதும் அதனை எதிர்த்து முறையீடு செய்ய கால அவகாசம் வழங்கப்படும். அது இயலாவிட்டால் நீதிமன்றத்துக்கு செல்லவும் பிரஜை ஒருவருக்கு உரிமை உண்டு என்றும் பெப்ரல் அமைப்பின் தலைவர் றோகன ஹெட்டிஆராச்சி நேற்று 14 அன்று தெரிவித்திருந்தார்.

19வது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் வேட்பாளர் ஒருவர் வேட்புமனுவைத் தாக்கல் செய்யும் போது உண்மையான தவல்களை வழங்கவேண்டியது வேட்பாளரின் பொறுப்பாகும். என்பதையும் ஹெட்டிஆராச்சி குறிப்பிட்டிருந்தார். இனி என்ன நடக்கும்? அடுத்து வரும் நாட்கள் மிகவும் முக்கியமானவை.

This document is scheduled to be published in the Federal Register on 08/15/2019 and available online at **https://federalregister.gov/d/2019-17498**, and on **govinfo.gov**

[4830-01-P]

DEPARTMENT OF THE TREASURY

Internal Revenue Service

Quarterly Publication of Individuals, Who Have Chosen To Expatriate, as Required by Section 6039G

AGENCY: Internal Revenue Service (IRS), Treasury.

ACTION: Notice.

SUMMARY: This notice is provided in accordance with IRC section 6039G of the Health Insurance Portability and Accountability Act (HIPPA) of 1996, as amended. This listing contains the name of each individual losing United States citizenship (within the meaning of section 877(a) or 877A) with respect to whom the Secretary received information during the quarter ending June 30, 2019. For purposes of this listing, long-term residents, as defined in section 877(e)(2), are treated as if they were citizens of the United States who lost citizenship.

| LAST NAME | FIRST NAME | MIDDLE NAME/INITIALS |
|---|---|---|
| ABE | HIDEHI | |
| ABE | KAZUE | |
| ABOTOMEY | SARAH | VICTORIA |
| ABUMOHOR | CRISTIAN | |
| ADACHI | HUBERT | TOMOHIRO |
| ADAM | SABINE | HELENE |
| AKAKI | MAYUMI | |
| AKONI | OLUWALOLOLA | BOLADALE |
| ALBRIGHT | DELMER | LEE |
| ALKAZEMI | BADER | FAISAL |
| ALKHABORI | KHADIJA | SALEEM JAWAD |
| ALLAN | ALEXANDER | MACMILLIAN |
| ALLEN | MICHAEL | JAMES |
| ALLISON | RALPH | ROBERT |
| ALLISON | RALPH | ROBERT |
| ALSCHULER | ZOE | JULIE |
| AMRIATI-LOEVAAS | KAREN | ELISE |
| ANDERSON | JAN | LOIS |
| ARROYABE | MIREN | EDITH |
| ARZE | LUIS | ELIAS |

This document is scheduled to be published in the Federal Register on 08/15/2019 and available online at **https://federalregister.gov/d/2019-17498**, and on **govinfo.gov**

# கோட்டைமுனை விளையாட்டுக் கிராமத்தின் அடுத்த திட்டம்

## "வளரும் வீரர்களுக்கான கிரிக்கெட் பயிற்சி"



மட்டக்களப்பில் கிரிக்கெட் விளையாட்டை மேம்படுத்தும் நோக்குடன் மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கிராமம் பல்வேறு வேலைத்திட்டங்களை செய்து வருகின்றது. அதில் புதியதொரு வேலைத்திட்டம் தான் புலம்பெயர்ந்து வாழும் உறுப்பினர்களின் பங்களிப்புடன் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் இளம் கிரிக்கெட் வீரர்களை உருவாக்கும் நோக்குடன் எனும் பெயரில் 13 மற்றும் 15 வயதிற்குட்பட்ட இளம் வீரர்களை இனம் கண்டு பயிற்சியளிக்கும் நோக்குடன் இன்று Emerging Players Programme அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டத்தின் முக்கிய நோக்கம் இளம் கிரிக்கெட் வீரர்களை உருவாக்கி தேசிய அணியில் இணைக்க முயற்சிப்பது. இதில் இன்று 30 இளம் கிரிக்கெட் வீரர்கள் உள்வாங்கப்பட்டு, இவர்களுக்கான சீருடை மற்றும் பாதணிகள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டது. இவ்வீரர்களை எதிர்காலத்தில் தேசிய அணியில்

**ஜெயா**

இணைத்துக் கொள்வதற்கான சகல முயற்சிகளையும் கோட்டைமுனை விளையாட்டு கிராமம் மேற் கொள்ள நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இன்னும் புதிய வீரர்களை இனி வரும் காலங்களில் இணைத்துக் கொளவதற்கான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கோட்டைமுனை விளையாட்டு கிராமம் மேற்கொள்ள Emerging Players Programme என்ற பெயரில் இவ்வேலைத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது இப்பணிகளை செயற்படுத்துவதற்காக ஒருங்கினைப்பாளராக திரு. வசந்தமோகன் அவர்களை கோட்டைமுனை விளையாட்டு கிராமம் நியமித்துள்ளது. இதில் முக்கிய விடயம் என்னவென்றால் 10 பயிற்சியாளர்கள் நியமிக்கப்படவுள்ளதுடன் இவர்களுக்கான மேலதிக பயிற்சிகள் மிக விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்து கலந்து கொண்ட திரு.ரமேஸ்குமார் அவர்கள் உரையாற்றுகையில் இவ்வமைப்பில் உள்வாங்கப்படும் வீரர்களுக்கு அதி சிறந்த பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும் இதற்காக கொழும்பில் இருந்து மாத்திரமல்ல வெளி நாடுகளிலும் இருந்தும் பயிற்சியாளர்கள் வரவழைக்கப்படவுள்ளதாகவும் இவர்களை தென் மாகானத்தில் பிரபல கழகங்கள் மற்றும் பாடசாலைகளுடன் கடின பந்து கிரிக்கெட் போட்டிகளை



ஏற்படுத்தி சுற்றுலா போட்டிகளை நடத்தவுள்ளதாகவும் இது மாத்திரமின்றி இந்தியா, மலேசியா போன்ற நாடுகளுக்கும் பயிற்சி போட்டிகளுக்காக அழைத்து செல்லப்படவுள்ளதாகவும் எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்சியாக பயிற்சி, கட்டுப்பாடான செயற்பாடு போன்றவற்றை கடைப்பிடப்போருக்கே இவ்வாய்பு வழங்கப்படவுள்ளதாகவும்; தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கை கிரிக்கெட் அணியின் முதல் டெஸ்ட் அணித்தலைவர் திரு.பந்துல வர்ணபுர அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தன் ஆரம்பகால கிரிக்கெட் அனுபவங்களை பகிர்ந்து கொண்டதுடன் கோட்டைமுனை விளையாட்டு கிராமம் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு செய்து வரும் பாரிய பணிகளில் இது சிறப்பு வாய்ததாகவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் தலைவர் திரு.சிவநாதன், செயலாளர் திரு. அருள்மொழி, பொருளாளர் திரு. ரஞ்சன், கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் தலைவர் திரு.சடாற்சரராஜா, பொருளாளர் திரு.தயாசிங்கம், கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் நம்பிக்கையாளர் சபை பிரதிநிதி திரு.காசிப்பிள்ளை, புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்து வருகை தந்த திரு ரமேஸ்கண்ணா மற்றும் கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் அங்கத்தவர்கள், கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கோட்டைமுனை விளையாட்டு கிராமம் பாடசாலை மட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டை மேம்படுத்தும் நோக்குடன் பாடசாலைகளுக்கான கிரிக்கெட் உபகரணங்களை வழங்கி வைக்கப்பட்டதுடன் புற்தரையிலான கிரிக்கெட் மைதானத்ததை சத்துருக்கொண்டான் கிராமத்தில் அமைத்து வருவதுடன் தற்போது வளர்ந்து வரும் இளம் கிரிக்கெட் வீரர்களை உருவாக்கும் இப்பணிக்கு நாமும் உறுதுணையாக இருப்போம்.



# விளையாட்டு

## சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறார் ஹாசிம் அம்லா




தென்னாபிரிக்க அணியின் முன்னணி வீரரான ஹாசிம் அம்லா சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இவர் இதுவரை 124 டெஸ்ட் போட்டிகள், 181 ஒருநாள் போட்டிகள், 44 இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

**யாசீர் அரபாத்**

இவர் மொத்தமாக சர்வதேச கிரிக்கெட் போட்டியில் 18672 ஓட்டங்கள் எடுத்துள்ளதுடன் மொத்தமாக 55 சதங்கள் மற்றும் 88 அரைச்சதங்கள் பெற்றுள்ளார். மேலும் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா சார்பில் 300 ஓட்டங்களை கடந்த ஒரே வீரர் அம்லா ஆவார்.

இந்நிலையில் 36 வயதான ஹாசிம் அம்லா சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வை அறிவித்துள்ளார். இது தொடர்பாக பேசிய அம்லா, தென்னாபிரிக்க அணிக்காக நான் விளையாடியதற்கு கடவுளுக்கு நன்றி. இந்தக் கிரிக்கெட் பயணத்தில் நான் நிறைய பாடங்கள் கற்றுக் கொண்டுள்ளேன்.
அத்துடன் கிரிக்கெட் வாழ்வில் நல்ல நண்பர்கள் பலரையும் சம்பாதித்துள்ளேன். எனது கிரிக்கெட் பயணத்திற்கு உதவியாக இருந்த எனது தாய் மற்றும் தந்தைக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று என்னுடன் விளையாடிய கிரிக்கெட் வீரர்களுக்கும் எனது நன்றியை தெரிவிக்கிறேன். மேலும் என்னை எப்போதும் ஊக்குவித்த ரசிகர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி எனத் தெரிவித்துள்ளார்.

## மட்டு.மேற்கு வலயத்திற்கு 32விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் நியமனம்!



**காரைதீவு சகா**

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு 32விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் கடந்த(29) திங்கட்கிழமை நியமனம் செய்யப்பட்டனர்.

நியமனக்கடிதங்களை மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் சி.சிறீதரன், வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான சோ.சுரநுதன், க.ஹரிகரராஜ் மற்றும் உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் இணைந்து வழங்கி வைத்தனர்.


கொழும்பு இசுருபாய மத்திய கல்வி அமைச்சிலிருந்து இவர்களுக்கான நியமனக்கடிதங்களை திங்களன்று வழங்குமாறு மாகாணக்கல்விப் பணிப்பாளருக்கு அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் அடிப்படையில், வலயக்கல்விப் பணிப்பாளருக்கு குறித்த கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டு, உரிய பயிற்றுவிப்பாளர்களுக்கு நியமனக்கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

## மேற்கிந்திய தீவுகள் அணியில் அதிக உடற்பருமனான வீரர்.



இந்திய அணிக்கு எதிராக இடம்பெறவுள்ள டெஸ்ட் போட்டி தொடருக்கான மேற்கிந்திய தீவுகள் அணியில் புதிதாக அதிக எடை கொண்ட வீரர் ஒருவர் சேர்க்கப்பட்டுள்ளார். ரஹீம் கார்ன்வால் என்ற அவ்வீரரின் உயரம் 6.6 அடி மற்றும் இவரது எடை 140 கிலோ ஆகும். கார்ன்வால் மேற்கிந்திய தீவுகள் அணிக்காக விளையாடும் பட்சத்தில் கிரிக்கெட் வரலாற்றில் அதிக எடையுடன் விளையாடிய வீரர் என்ற வினேதமான சாதனையை படைப்பார்.

கார்ன்வால் 55 முதல் தர போட்டிகளில் விளையாடி 2,224 ரன்களும், 260 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இந்திய கிரிக்கெட் அணி 20 ஓவர் தொடரை 3-0 என்ற கணக்கில் முழுமையாக வென்றது. தற்போது ஒருநாள் போட்டி தொடர் நடைபெற்று வருகிறது. இதனைத் தொடர்ந்து இவ்விரு அணிகளுக்கும் இடையேயான டெஸ்ட் போட்டித் தொடர் எதிர்வரும் 22-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## அறுகம்பே சர்வதேச அரை மரதன் ('Half Marathon' )ஓட்டப்போட்டி



அறுகம்பே சர்வதேச 'Half Marathon' ஓட்டப்போட்டியின் 21.1 கி.மீற்றர் பிரதான மரதன் போட்டி நிகழ்ச்சியில், ஆண்கள் பிரிவில் வத்தேகமயைச் சேர்ந்த நிசான் மதுரங்க முதலாமிடத்தினையும், நுவரெலியாவைச் சேர்ந்த அருன பண்டார இரண்டாமிடத்தினையும், அவிசாவளையைச் சேர்ந்த கெளும் தர்மரத்ன மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டி நிகழ்ச்சியின் பெண்கள் பிரிவில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த எமிலி ஒலிவியர் முதலாமிடத்தினையும், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த அஞ்சலினா பென்டின்புரோ இரண்டாமிடத்தினையும், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிரான்ஸஸ்கா பொனாசியோ மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச அரை மரதன் ஓட்டப்போட்டி அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும், மருத்துவருமான டாக்டர் இஸட்.எம். ஹாஜித் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (11) அறுகம்பேயில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

இம்மரதன் ஓட்டப்போட்டியில், 12நாடுகளிலிருந்து 60 வெளிநாட்டு வீரர்களும், 140 உள்நாட்டு வீரர்களும் என சுமார் 200பேர் கலந்துகொண்டனர். தனது இரு கண்களையும் இழந்து பார்வையற்ற மாற்று திறனாளியான கொலன்னவையைச் சேர்ந்த காலித் உஸ்மான் இப்போட்டியில் கலந்துகொண்டமை விசேட அம்சமாகும்.

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:

" அலையப்போடி நல்லரெத்தினம் (ஸ்தாபகர்)
அறிவாலயம் அறக்கட்டளை நிதியம்
பண்டாரியாவெளி கொக்கட்டிச்சோலை "

## தாந்தாமலைக்கு புழுதி வாங்கச்சென்ற மக்கள்!



முன்னால் வாகனம் போனா பின்னால் போற நமக்கு அதோ கதிதான் என்கிறார் சந்தணப்பிள்ளை. மாவடிமுன்மாரி சந்தியில் உள்ள வயலூர் முருகன் ஆலயத்தில் சிறிதுநேரம் இருந்து இளைப்பாறிவிட்டு செல்வோம் என சந்தனப்பிள்ளை தெய்வானையுடன் கூற இருவரும், கோயிலின் முன் மண்டபத்தில் இருந்து பேசிக்கொண்டிருந்தனர். தாந்தாமலை ஆலயத்திற்கு செல்வதற்காக கால்நடையாக வருகைதந்த இருவருமே இனிநடக்க இருக்கின்ற வீதியினை நினைத்தே இதனைப் பேசிக்கொண்டிருந்தனர்.

மணற்பிட்டியில் இருந்து மாவடிமுன்மாரி சந்திவரை காப்பட்வீதி அமைத்ததினால் புழுதியில்லை. தாந்தாமலைக்கு இன்னமும் போகவிருக்கின்ற பகுதியை நினைத்தால் மனப்பயமாகவும் இருக்கின்றது. இனி இருப்பது வீதியில்லை, கிறவல் புழுதியும், பள்ளமும், படுகுழியும், மணலும், குட்டைக்கற்களும் நிறைந்த பகுதி. இதனை வீதி எண்டு சொல்ல முடியாது. ஏதோ தாந்தாவிற்கு செல்வதற்கான வழியென்றே சொல்லலாம். தாந்தாமலை முருகன் ஆலய உற்சவம் தொடங்கினால், இந்த வீதியால் நிறைய சனமும், வாகனமும் போக்குவரத்துச் செய்யும்.



இந்த வருடமும் கடந்த மாதம் 25ம் திகதி உற்சவம் தொடங்கினதில் இருந்து நிறைய அடியார்கள் ஆலயத்திற்கு வாகனங்களிலும், கால்நடையாகவும் சென்றுவந்தாங்க. சென்று வந்ததில் முக்காவாசிக்கு மேலானவர்களுக்கு தடுமலும், தும்மலும், மூக்கடைப்புமாம். என்றுதான் பேசிக்கொள்கின்றனர். ஏனென்றால் மாவடிமுன்மாரி சந்தியில் இருந்து மாவடிமுன்மாரி பாடசாலை வரையும் கிறவல் புழுதி, வாழைக்காலை பாலத்தில் இருந்து தாந்தாமலை முருகன் ஆலயம் வரையும் கிறவல் புழுதியும், மணலும் இதனால் உடம்பு பூராகவும் கிறவல்தான். எந்த நிற உடை அணிந்து ஆலயம் சென்றாலும் கிறவல் நிறத்தில்தான் எல்லோருடைய உடையும் ஆலயத்தினை அடைந்ததும் இருக்கின்றது. ஒவ்வொரு வருடமும் இதே நிலைமையாகத்தான் இருக்கின்றது. எத்தனை முறை சொல்லியும் யாரும் ஏறெடுத்தும் பார்க்கின்றார்கள் இல்லை.

**படுவான் பாலகன்**

மழையும் பெய்து கனகாலம். எங்கும் வறட்சியாத்தான் இருக்கு. மழையெண்டான பெய்திருந்தால் புழுதி எல்லாம் அடங்கி இருக்கும். அதுவும் நடக்கல்ல. நம்ம புழுதியிலதான் தவண்டு வளர்ந்த என சந்தனப்பிள்ளை தெய்வானையிடம் கூறினாள். இதனால் புழுதியை தாங்கிக் கொள்ளும் சக்தி உடம்பில் இருக்கு. ஆன இப்போதைய பிள்ளைகள் எல்லாம் மண்ணிலே இறங்கி விளையாடுறதும் இல்லை. பிறப்பிலே அஸ்மா நோய் மற்றும் என்னன்னோவோ நோயெல்லாம் பிள்ளைகளுக்கு ஏற்பட்டிருக்கு. இதனால் சின்னப்பிள்ளைகள் எல்லாம் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு நாளும் கஷ்டத்தினை அனுபவிப்பவனுக்குதான் அதுட வலியும், வேதனையும் தெரியும். வருடத்தில் ஒருதடவை கோயிலுக்கு வந்து சென்ற ஒருநாளிலையே தாந்தாமலை கோயிலுக்கு செல்வதற்கு தயங்கும் பலர் மத்தியிலும், என்னதம்பி இப்பவும் அந்த வீதி அப்படிதானா இருக்கு?, வீதி திருத்தினபிறகுதான் கோயிலுக்கு போகவேணும் என்று கூறுகின்ற அனேகரும் இருந்துகொண்டிருக்கின்றனர்.

ஆனால் புழுதியென்றாலும் சரி, விழுந்து எழுந்தாலும் சரியென நினைந்து ஒவ்வொரு நாளும் இங்குள்ள பாடசாலைகளுக்கும், தமது இல்லங்களுக்கும், ஏனைய திணைக்களங்களுக்கும் சென்றுவருகின்றவர்கள் எதிர்கொள்ளும் வேதனையை சொன்னால் புரியாது. ஒருநாள் அனுபவித்தவனுக்கு தெரியும். இவ்வாறு நாளாந்தம் சென்று வருபவர்களில் பலருக்கு முள்ளந்தண்டு பிரச்சினையும் ஏற்பட்டிருக்கு என தெய்வானைப்பிள்ளை கூறுகிறாள்.

மழை காலத்தில் வெள்ளமும், வெயில் காலத்தில் புழுதியும் சேர்ந்த வீதியைப் பற்றி பலதடவை கூறியும், மக்கள் மனு கொடுத்தும், அந்தத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது, இந்த திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது, நாளைக்கு வேலை ஆரம்பிப்பாங்கள், நாளன்றைக்கு வேலை ஆரம்பிப்பாங்கள் என்று சொல்லிச் சொல்லி ஏமாற்றிய வருடங்கள் பல. இன்னமும் எத்தனை வருடங்களுக்கு நாளை, நாளை எனச்சொல்லி ஏமாற்றப்போகின்றார்களோ தெரியவில்லை. எனக்கூறிக்கொண்டு, இருவரும் தாந்தாமலைநோக்கி நடக்கத்தொடங்கினர். தாந்தா முருகனுக்கு அரோகரா!!!

தொடர்ச்சி...

## ரணில் சஜித் இருவரில் ஒருவர் வேட்பாளராகலாம்!

செய்யப்படுவாரென கட்சியின் தவிசாளர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.



சபாநாயகராகப் பதவி வகிக்கும் கரு ஜயசூரியவுக்கு கட்சியின் மத்திய குழுவில் ஆதரவு இல்லையென கட்சித் தகவல்கள் கூறுகின்றன. இதேவேளை, மத்திய குழுவின் அங்கீகாரத்துடன் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படலாமெனவும் மற்றுமொரு தகவல் கூறுகின்றது.

அதேவேளை, சஜித் பிரேமதாசவை வேட்பாளராக நியமிப்பது தொடர்பாக அமைச்சர் மங்கள சமரவீர ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடியுள்ளார். தேர்தல் கள நிலமைகளை அறிந்து இறுதி நேரத்தில் ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக நியமிக்கலாமா என்பது குறித்தும் அமைச்சர் மங்கய சமரவீர கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் கலந்துரையாடியுள்ளதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

அமைச்சர் மங்கள சமரவீர அமெரிக்கா இராஜாங்கதம் திணைக்களத்திற்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவர் 2015 ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் அரசாங்கத்தை அமைப்பில் மங்கள சமரவீர தீவிர பங்காற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

களநிலவரப்படி ரணிலுக்கு நல்ல ஆதரவு இருப்பதாக ஐதேக வட்டாரங்கள் நம்புவதந் காரணமாக அவரையே வேட்பாளராக நிறுத்தலாமா என்றும் ஒரு தரப்பு முயற்சிப்பதாகக் கூறப்படுகின்றது. அடுத்து வருகின்ற வாரங்களில் இவை குறித்த மேலதிக தகவல்கள் வெளியாகலாம்.

தொடர்ச்சி...

## மட்டக்களப்பில் கிராம பாதுகாப்பு குழுக் கூட்டம்

பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்ட (கமறெக்கும) முதல் ஆரம்பக் கூட்டம் இன்று காலை 9.30 மணியளவில் மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான மாணிக்கம் உதயகுமார் தலைமையில் மண்முனை வடக்கு பிரதேச செயலக கேட்போர் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு ஜனாதிபதி செயலகத்தின் கிராம பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பணிப்பாளர் நாயகம் எச்.டீ.கமல் பத்மசி ஸ்ரீ அவர்கள் விசேட அதிதியாக கலந்து கொண்டு செயலமர்வினை முன்னெடுத்தார்.

இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் பதினான்னு பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம சேவகர்கள்,பாதுகாப்பு படையினர், பொலிஸ் அதிகாரிகள், மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந் ஆகியோர் கலந்து கருத்துரைகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# யாருக்குப் பின் யார்?

வி.துலாஞ்சனன் (இலங்கை நிர்வாக சேவை அதிகாரி)

ஒரு நிகழ்வொன்றை ஒழுங்கு செய்திருந்தோம். எழுத்தாளர் ஒருவர் அதிதிகளில் ஒருவர். ஆனால், அவர் ஒரு முன்னாள் அரச நிர்வாகி. எழுத்தாளர் என்ற ரீதியிலேயே அழைக்கப்பட்டிருந்ததால், அழைப்பிதழிலும் அந்த இடமே அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

நிகழ்வு நடந்த அன்று அவர் வருகை தரவில்லை. நோய்வாய்ப்பட்டதாக அறிவித்திருந்தார். நிகழ்வு முடிந்து இரண்டு நாட்களின் பின் அவரது நண்பர் ஒருவரை சந்திக்கக் கிடைத்தபோது, அழைப்பிதழில் தனது தகுதிக்கேற்ற இடம் வழங்கப்படாமல் அவமதிக்கப்பட்டதாக வருந்தினாராம்.

பொதுவாக அரச நிகழ்வுகளை, அல்லது கலை நிகழ்வுகளை ஒழுங்கமைத்தவர்களுக்கு இந்த சிக்கல் நன்கு புரிந்திருக்கும். அழைப்பிதழில் அல்லது வரவேற்பில் தனக்கு உரிய கௌரவம் வழங்கப்படவில்லை என்றும், தான் அவமதிக்கப்பட்டதாகவும் கூறி மேடையிலிருந்து இறங்கிச் சென்றவர்கள்கூட உண்டு. கல்வி, அனுபவம், தொழில் அடிப்படையில் தான் குறிப்பிட்ட சிலரை விட மேம்பட்டவன் என்ற பாவத்தோடு இருக்கும் சிலருக்கு இது ஆணவத்தில் விழும் அடி கூட.

ஆனால், அந்த ஒழுங்கு சமூக ரீதியிலும் முக்கியமானதுதான் என்பதை மறுக்க முடியாது. மேடையொன்றில் ஒருவருக்கு வழங்கப்படும் முன்னுரிமையே அவரது அதிகாரத்தையும், ஆளுமையையும் தீர்மானிக்கும் கூறாக பொதுமக்களால் அங்கீகரிக்கப்படுகிறது. அதில் உயர்வு தாழ்வுகள் ஏற்பட்டால், தமது சுய கௌரவம் பாதிக்கப்படுவதாக அவர்கள் எண்ணுவதில் தவறொன்றுமில்லை.

தனியார் அமைப்புகள் நடத்தும் கலை நிகழ்வுகளில் இதை ஒன்றும் செய்ய முடியாதுதான். ஆனால், அரச நிகழ்வுகளில் இந்த ஒழுங்கில் தான் ஒவ்வொருவருக்கும் முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்று அரசாங்கமே அங்கீகரித்த ஒரு பட்டியல் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?

இந்த முன்னுரிமைப் பட்டியலை உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வலைத்தளத்தில் நீங்கள் தரவிறக்கிக் கொள்ளலாம். அரச நிகழ்வுகளிலோ, பண்பாட்டு விழாக்களிலோ இந்த ஒழுங்கை மனதில் வைத்து நீங்கள் நிகழ்ச்சி நிரலையும் அழைப்பிதழையும் தயார் செய்யும் போது, தேவையற்ற குழப்பங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

தற்போதுள்ள திருத்தப்பட்ட முன்னுரிமைப் பட்டியல், கடந்த 2018 ஜனவரி 9ஆம் திகதி வெளியிடப்பட்டது. இந்த ஒழுங்கில் மாற்றங்களை ஏற்படுத்த இலங்கை அரசின் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், பிரதம நீதியரசர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள், இராணுவக் கட்டளைத் தளபதி, மாகாண ஆளுநர்கள், மாகாண முதலமைச்சர்கள், மாகாண அமைச்சர்கள் என்போர் இதில் முறையே முதல் பத்து இடங்களைப் பிடித்துக் கொள்கிறார்கள்.

பிரதி சபாநாயகர், பிரதியமைச்சர்கள், ஆணைக்குழுக்களின் பிரதித்தலைவர்கள், பிரதம கொறடா, அரச தூதர்களும் உயர்ஸ்தானிகர்களும், ஐநாவின் வதிவிடப் பிரதிநிதிகள், அரசியலமைப்புச் சபையின் உறுப்பினர்கள், சட்டமா அதிபர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோர் அடுத்தடுத்த முன்னுரிமைகளுக்கு உரியவர்கள்.

இதற்குப் பின்பே, பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைத் தவிசாளர்கள், மாகாண அமைச்சர்கள், மாகாண எதிர்க்கட்சித்தலைவர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், ஜனாதிபதி செயலாளர், பிரதமர் செயலாளர், அமைச்சர்களின் செயலாளர்கள், கணக்காய்வாளர் நாயகம், மத்திய வங்கி ஆளுநர் ஆகியோர் முறையே வருகிறார்கள்.

இதன் பின்னர் அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர்கள், பாராளுமன்ற செயலாளர் நாயகம், ஆணைக்குழுக்களின் தவிசாளர்கள், ஒம்புட்ஸ்மன், ஜனாதிபதி ஆலோசகர்கள், திறைசேரியின் பிரதியமைச்சர், அரசியலமைப்புச் சபையின் செயலாளர் நாயகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர், பல்கலைக்கழக துணைவேந்தர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் இடம்பிடிக்கிறார்கள்.

இதை அடுத்து முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், சொலிஸ்டர் நாயகம், மேல்நீதிமன்ற நீதிபதிகள், இலங்கைக்கான வருகை தரு தூதர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள், மேலதிக அமைச்சர்கள், ஐநா அமைப்புக்களின் பிரதிநிதிகள், திணைக்களத்தலைவர்கள், மாநகரசபையின் நகரபிதாக்களும் தவிசாளர்களும், மாநகர, நகர, பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் முறையே இடம்பெற வேண்டும்.

ஒரு குறித்த அமைச்சை, அல்லது மாகாணத்தை, அல்லது பிரதேசத்தை முன்னிலைப்படுத்தி இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்படும் போது, அந்த அமைச்சு அல்லது மாகாணம் அல்லது பிரதேசம் சார்ந்த நிர்வாகிகளுக்கு அதிக முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும். முன்னாள் ஜனாதிபதிகளுக்கு பிரதமருக்கு அடுத்த இடம் கொடுக்கலாம். அது அவர்கள் பதவி விலகிய நாளின் அடிப்படையில் வழங்கப்படும்.

முன்னுரிமை ஒழுங்கில் ஒரே இடத்தில் இருப்பவர்களுக்கு அவர்களது சேவைக்காலம் கருத்தில் கொள்ளப்படவேண்டும். ஒரே சேவைக்காலம் உள்ளவர்கள் என்றால், அகரவரிசைப்படி அவர்களை முன்பின்னாக ஒழுங்குபடுத்தலாம். இந்த ஒழுங்கில் மதகுருக்கள் தேவையைப் பொறுத்து முன் பின்னாக வரிசைப்படுத்தப்பட முடியும்.

மேலதிக விளக்கங்களைப் பெற, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வலைத்தளத்தில் அல்லது கீழ்க்குறிப்பிட்ட முகவரிக்குச் சென்று, இந்தப் பட்டியலை தரவிறக்கிக் கொள்ளுங்கள்.

http://www.moha.gov.lk/web/images/downloads/National_Items/Table_of_Precedence.pdf

---

# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை

*அத்தியாயம்-13*

கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா



## இராஜதுரையின் பேச்சு..

இரா.தவராஜா 16.06.2013 ஞாயிற்றுக்கிழமை தேவநாயகம் மண்டபத்தில் தலைமை தாங்கி இராஜதுரையவர்களைப் பற்றிப் பேசிய பேச்சின் சென்ற இதழின் தொடர்ச்சி...

அமரர் கல்கி அவர்கள் தனது சஞ்சிகையில் "பரதநாட்டியம் செய்த பாக்கியம்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் கல்கி அவர்கள் இமயமலையிலிருந்து திருகோணமலை வரை என்ற சொற்றொடரொன்றை குறிப்பிட்டிருந்தார். அண்ணர் இராஜதுரை இதைக் கண்டதும் பொருமினார் வேதனைப்பட்டார்.

திருகோணமலைக்கு அப்பால் மட்டக்களப்பு என்கின்ற ஊர் இருப்பது தெரியவில்லையா? அல்லது நாங்களெல்லாம் தமிழர்கள் இல்லையா? என நீண்ட கடிதமொன்றை எழுதிச் சுடச்சுட கல்கிக்கு அனுப்பிவைத்தார். கல்கி அவர்கள் அண் ணரின் கடிதத்தை ''மட்டக்களப்பை மறவாதீர்'' என்று தலைப்பிட்டு தனது கல்கி சஞ்சிகையில் வெளியிட்டு வருத்தத்தையும் தெரிவித்திருந்தார். அதன் பிறகு அதே கல்கியில் ''பழிக்குப் பழி'' என்கின்ற சிறு கதையையும் இவர் எழுதியுள்ளார். அண்ணரின் சிறுகதைத் தொகுதியான ''மிஸ்கனகம்'' அந்தக்காலத்தில் மிகச்சிறப்பான கதைத் தொகுதியென



பலராலும் பாராட்டப் பட்டதை இந்நேரத்தில் நினைவு கூரக் கடப்பாடுண்டு.

கோபுரம் இதழில் "மாநகர் மதுரை" என்ற தலைப்பிலும் "ஞானப்பிரகாசமுனிவர்" என்ற தலைப்பிலும் கட்டுரைகளை எழுதியிருந்தார்.

1979ம் ஆண்டு பாராளுமன்றத்தில் இவர் ஆற்றிய உரைகள் "அன்பும் அகிம்சையும் தேசிய ஒற்றுமைக்கு வழி" என்ற பெயரில் வெளிவந்தது.

1979ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ந்திகதி அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரை "அண்ணாமலை அரசர் இமயச்சாதனை" என்ற பெயரில் வெளியாகி உள்ளது. அதே 1979ம் ஆண்டு நவம்பர் மாதம் 08ம்திகதி சுவாமி விபுலானந்தரின் முத்திரை வெளியீட்டு விழாவில் இராஜதுரையவர்கள் இலங்கை வானொலியில் நிகழ்த்திய உரை "அருட்திரு விபுலானந்தர் உரை" என்ற தலைப்பில் வெளியாகியிருந்தது. இப்படி அவரின் பேச்சுக்கள் புத்தக வடிவில் வெளிவந்திருப்பது நாம் பெருமைப்படக் கூடிய முதுசங்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

அண்ணரின் பேச்சில் நான் ரசித்த அவரின் சமயோசித பேச்சையும் துணுக்குகள் சிலதையும் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

முன்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாப்பு விதிகளிலொன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகள் மந்திரிகளின் விழாக்களிலோ கூட்டங்களிலோ பங்குபற்றக்கூடாது என்பது.

1979ம் ஆண்டு மட்டக்களப்பு திருமலைவீதியில் அமைக்கப்பட்ட பொலிசாரின் விடுதியை திறப்பு விழாச் செய்ய அந்நேரம் பிரதமராகவிருந்த திரு.ஆர். பிரேமதாசா அவர்கள் வருகை தந்திருந்தார்கள். அவ்விழாவை நானும் எனது நண்பர்களும் மெட்றாஸ் கபேக்கு முன்னால் கூட்டத்தில் பேசுவோரின் பேச்சுக்களை செவிமடுத்துக் கொண்டிருந்தோம். அம்மேடையில் பிரேமதாசா அவர்களை இராஜதுரையவர்கள் வரவேற்கும் போது கூறியது. "பிரேம" என்றால் அன்பு "தாச" என்றால் அடிமை. நீங்கள் மக்களின்



அன்புக்கு அடிமை. நான் தமிழ் பண்புக்கு அடிமை. என்றாரே பார்க்கலாம். கைதட்டல் அடங்க பலநிமிடம் எடுத்தது.

1999ம் ஆண்டு 10ம்மாதம் 03ந்திகதி "கலதாரி ஹோட்டலில்'' இராஜதுரையவர்களின் எழுத்து வாழ்வின் 50வது ஆண்டு பொன்விழா நிகழ்ச்சியை கொழும்பு வாழ் தமிழ் எழுத்தாளர்கள் ஒழுங்கு செய்திருந்தனர். அவ்விழாவுக்கு எனக்கும் அழைப்பு விடுத்திருந்தனர். அவ்விழாவில் ஜனாப் அஸ்ரப் அவர்கள் பேசும்போது சொன்னார். நான் பல ஆண்டுகளுக்கு முன் கல்லடிக் கூட்டத்தில் அண்ணரின் மேடையில் பேசும் போது பார்த்த அதே இளமையோடு இன்றும் அவரைப் பார்க்கின்றேன். இவரின் இளமைக்கு என்ன மர்மமோ தெரியவில்லை என்றார். நன்றியுரையாற்ற வந்த இராஜதுரை சொன்னார். தமிழுக்கு செந்தமிழ் பைந்தமிழ் முதுமைத்தமிழ் இனிமைத்தமிழ்

தொடர்ச்சி பக்கம் 15

# இப்படியும் ஒரு காலம் நிலவியது : கதை— 9




## அப்பாவிகளை ஒரு வாழைத்தண்டு கொண்டு கலைத்த இன்னொரு அப்பாவிகள்

*(எல்லா இனத்துப் பேரப் பிள்ளைகளுக்கும் ஒரு பாட்டன் சொல்லும் பழம் கதைகள் - 9)*

அற்புதமான இனப்பிணைப்பும் புரிந்துணர்வும் எம் கிராமத்தில் அன்று நிலவியது.

இந்த அற்புத இணைப்பில் மண்ணை வாரிப்போட்டது 1956 ஆம் ஆண்டு இனக் கலவரம். பத்திரிகைகள் கலவரம் பற்றிப் பெரிதாகக் கூறின. வானொலி கதறியது . சாரி சாரியாக தமிழ் மக்கள் அடிபட்டு,சொத்துக்களை இழந்து, சொந்தங்களை இழந்து, அகதிகளாக நடந்தபடி வருகிறார்கள் என்னும் கதைகள் காட்டுத் தீபோலப் பரவின.

கொழும்பில் தமிழர்களுக்கு இளைக்கப்பட்ட வன்முறைகள் கண்ணும் காதும் மூக்கும் வைத்துப் பெரிது படுத்தப்பட்டன.

கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைப் பிழந்து கருப்பையிலிருந்து குழந்தையை எடுத்து அதனை சிங்களவர் நெருப்பில் வீசி எறிந்தனர் எனும் கதைகள் வேகமாகப் பரவின.

சிங்கள மக்கள் தமிழ் மக்களின் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தினர், அவர்கள் உடைமைகளைச் சூறையாடினர், வாளால் வெட்டிக் கொலைகள் செய்தனர், தமிழ்ப்பெண்களின் தாலிகளை அறுத்தனர், அப்பெண்களைக் கூட்டாகக் கற்பழித்தனர். தமிழ்ச் சிசு ஒன்றைப் பெற்றோரின் முன்னிலையில் இரண்டு கால்களிலும் பிடித்துத் தூக்கித் தரையில் அறைந்து சின்னாபின்னமாக்கிக் கொன்றனர், கொதிக்கும் தார்ப்பீப்பாக்களுள் தமிழர்களைத் தூக்கிப் போட்டனர், தமிழர்களைத் தேடித் தேடி அழித்தனர் என்ற உணர்ச்சியூட்டும் கதைகள் தமிழர் மத்தியில் வெகு வேகமாகப் பரவலாயின.

பொலனறுவையிலிருந்து ஒரு லொறியில் சிங்களக் காடையர்கள் மட்டக்களப்பு நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற வதந்தி வேறு. அமைதியாக வாழ்ந்த அப்பாவி மக்கள் அலமந்து விட்டார்கள்.

ஒரு தனி லொறியில் வந்து முழு மக்களையும் அழிக்க முடியுமா? என்று சிலர் சிந்திக்காமல் இல்லை. எனினும் பயம், பீதி, தற்காப்பு என்பன மக்களைப் பீடித்துக் கொண்டன.

காலிமுகத் திடலில் தலைவர்களைப் பதம் பார்த்த சிங்களக் காடையர் கூட்டம் இப்போது சொந்த ஊர்களுக்குள் சாதாரண தமிழ் மக்களைப் பதம் பார்க்க வருகின்றது என்ற கதை வேறு. வதந்திகள் காட்டுத் தீ போல பரவ ஆரம்பித்து விட்டன நிலைமைகள் வெகு மோசமாகிவிட்டன.

டேவிட் சிங்கோவின் லொறியை ஓட்டிக்கொண்டு பியஸேனா வார் ரோட்டால் முகத்துவாரப் பக்கம் சென்றார்.



ராஜதுரையின் கடையில் கூடிய தமிழ் இளைஞர் குழாம் ஒன்று அந்த லொறி திரும்பி வரும் வழியில் அதற்கு வார் ரோட்டின் இரு புறமும் இருந்த நச்சு மரக்காட்டுக்குள் இருந்து கல்லெறிய வேண்டும் என முடிவெடுத்தது. பல ஊர்ப்பெரியவர்கள் அது பிழை எனக் கூறினர்.

"யாரோ செய்த தவறுகளுக்கு நம்மோடு பழகியவர்களைத் தண்டிப்பதா?"என்று பலர் கூறிய கூற்றுக்கள் எடுபடவில்லை. எனக்குப் பெரியவர்கள் கூறியது சரியெனப்பட்டது. நான் அந்த இளைஞர்களுடன் செல்லவில்லை.

நிச்சயமாக இச்செயல் என் அப்பாவுக்கும்,அம்மாவுக்கும் அறவே பிடிக்காது என்பது எனக்கு நன்கு தெரியும்.

ராஜதுரையின் கடைக்கு அருகே இருபுறமும் மிக அடர்த்தியான நச்சுமரக் காடு. நச்சுமரக் காட்டுள் நின்று இளைஞர்கள் கல்லால் எறிவதற்குப் பதில் காய்ந்த நச்சுக் காய்களால் எறிந்தார்களாம்.

"இது ஒரு குழந்தைப் பிள்ளை விளையாட்டு" என்று என் தந்தை மனவருத்தத்தோடு கூறினார்.

அப்போது அமிர்தகளியில் காலியிலிருந்து வந்த சிங்கள மீனவர்கள் வாடி அடித்து அதிகமாகக் குடியிருந்தனர். அவர்களுக்கும் அமிர்தகளித் தமிழ் மக்களுக்குமிடையே மிக நெருக்கமான, அந்நியோந்நியமான உறவே நிலவியும் வந்தது.

இளைஞர்கள் புடை சூழ நாட்டு நடப்புகளைக் கதைத்துக் கொண்டிருக்கிறார் கடைக்கார ராஜதுரை, அவருடன் கூட இன்னும் சிலர் சாதாரண சிங்களத் தொழிலாளர் கூட்டம் ஒன்று – அதில் பத்துப் பன்னிரண்டு பேர் இருக்கலாம் கலவரத்துடன் தமக்குள் கதைத்துக் கொண்டு மீன் வாடிகள் இருக்கும் பக்கம் செல்ல வந்து கொண்டிருந்தனர்.

சிங்களக் காடையர்களின் குத்து,வெட்டு, கொலைக் கதைகளைக் கதைத்துக் கொண்டிருந்த ஆலமரத்தடித் தமிழ்க் கூட்டம் அவர்களைப் பார்த்து என்ன செய்வதென்றறியாது நின்றது.

திடீரென அதில் ஒருவர் அருகில் கிடந்த வெறும் வாழைத்தண்டைக் கையில் எடுத்து "எங்கடா போறீங்க சிங்கள நாய்களே" என்று அந்த எளிய வாழைத் தண்டால் எறிய அத்தனை பேரும் அலறிப் புடைத்துக் கொண்டு "அம்மே" என ஓடியமை எனக்கு மனதில் பெருத்த சஞ்சலத்தை ஏற்படுத்தியது.

அதில் ஒருவர் கிழவர், வெற்றுடம்பு, தோழில் ஒரு துவாய். அவர் முகம் போன போக்கும் பயந்து நடுங்கிய அவரது உடலும், ஏனையோர்களின் முகங்களில் காணப்பட்ட மரண பயமும் அறுபது வருடங்களாகியும் என் மனதை விட்டு இன்னும் அகலகவில்லை.

அப்பாவிகளை ஒரே ஒரு வாழைத்தண்டு கொண்டு கலைத்த இன்னொரு அப்பாவிகள்.

மறுநாள் பண்டா ஒரு சிறு பையுடன் வீட்டுக்கு வந்து அம்மாவை நமஸ்காரம் பண்ணிவிட்டு "நான் போகிறேன் அம்மா" என்றான்.

அம்மாவின் மனதுள் என்னென்ன எண்ணங்கள் ஓடினவோ கண்களில் கண்ணீர் மல்க அம்மா முந்தானை முடிச்சை அவிழ்த்து அதில் இருந்த அத்தனை காசுகளையும் அவன் கைகளில் அவன் மறுக்க மறுக்கத் திணித்தாள், "போயித்து வா பண்டா" என்றாள் அம்மா "போறேன் அம்மா வருவேனோ தெரியாது" பண்டா கலங்கும் கண்களுடன் விடை பெற்றான்.

நாங்களும் கலங்கும் கண்களோடு விடை கொடுத்தோம். அனைவரும் சூழ் நிலையின் கைதிகள். சில நாட்கள் அம்மா பண்டாவின் கவலையில் இருந்தாள். எப்போதும் பண்டாவின் பேச்சு வதந்திகள் அவள் மனதை மாற்றி விடவில்லை.

இனச்சண்டையை அவள் முற்றாக வெறுத்தாள்.

பியதாஸாவும் வந்து எங்களிடம் விடை பெற்றுச் சென்றான், ஒன்றாக விளையாடியவர். எங்கள் இன்ப துன்பங்களில் ஒன்றாகக் கலந்து கொண்டவர். ஒன்றாகச் சிரித்து மகிழ்ந்தவர். இப்போ பிரியாவிடைக்கு வந்து நிற்கிறார். சில நண்பர்கள் பியதாஸாவை எதிரியாகக் கருதி அவனுடன் கதைக்கவில்லை.சிலர் கண்கலங்கினார்கள். எனக்கும் கண் கலங்கியது.

அதற்குப்பின் இவர்கள் இருவரையும் நான் வாழ்க்கையில் சந்திக்கவேயில்லை.

ஒற்றுமையைக் குலைத்த இந்த 1956 இனக்கலவரம் மக்கள் நெஞ்சில் இன உணர்ச்சியையும், இனவெறியையும் விதைத்துச் சென்றது.

நாமும் காலத்தின் கைதிகளானோம்.



# கற்போம்

## விஞ்ஞானம்

குணம் சவரிராஜா

மென்டலின் தத்துவங்களின் பிரகாரம், **F1** மற்றும் **F2** சந்ததிகளில் பிறப்புரிமையமைப்பு விகிதங்கள், பொதுவான துவிக்கலப்புப்பிறப்பு இனக்கலப்பில் காண்பிக்கப்படுவது போன்ற பிறப்புரிமை விகிதங்களை ஒத்ததாக எதிர்பார்க்கப்படுகின்றன. எனினும், மேலாட்சியின் தாக்கம் காரணமாக, பொதுவான துவிக்கலப்புப்பிறப்பு இனங்கலத்தலுக்கான தோற்றவமைப்பு விகிதம் விலகிச் செல்வதாக உள்ளது. **F2** தோற்றவமைப்பு விகிதம் 9:3:3:1 இல் இருந்து 13:3 என மாற்றமடையலாம்.

பின்னிடைவான மேலாட்சி **(Recessive epitasis)**
ஒரு குறித்த நிறமூர்த்தத் தாபனத்தின் சமநுகத்துக்குரிய பின்னடைவானதொரு பிறப்புரிமையமைப்பு, வேறொறு தானத்திலுள்ள தனித்ததொரு பரம்பரையலகின் வெளிப்பாட்டை மாற்றும்பொழுது / மறைக்டகும் பொழுது, அது பின்னிமைவான மேலாட்சி எனக் குறிப்பிடப்படுகின்றது.


பின்னிடைவான மேலாட்சிக்கு நல்லதொரு உதாரணமாக இனிப்புப் பட்டாணித் தாவரத்தின் **(Lathyrus)** பூவின் நிறமாகும். இத் தாவரத்தில் ஊதா நிறப் பூக்கள் மற்றும் வெள்ளை நிறப் பூக்கள் கொண்ட பேதங்கள் உள்ளன.

சமநுகத்துக்குரிய ஆட்சியான ஊதாநிறப்பூ **(AABB)** மற்றும் சமநுகத்துக்குரிய வெள்ளைநிறப்பூ **(aabb)** பேதங்களுக்கிடையே நடைபெற்ற ஒரு இனங்கலத்தல் **F1** சந்ததியில் 100**%** ஊதாநிறப்பூக்களை உற்பத்திபண்ணியது. **F1** தாவரங்களுக்கிடையிலான இனக்கலப்பு, ஊதாநிறப்பூக்களுக்கு வெள்ளைப்பூக்கள் 9:7 என்ற விகிதத்தைக் கொண்ட **F2** சந்ததியை உற்பத்தி செய்தது. இனிப்புப் பட்டாணிப் பூவில் ஊதாநிறமானது **A** மற்றும் **B** ஆகிய இரண்டு ஆட்சியுடைய பரம்பரையலகுகளால் ஆட்சிசெய்யப்படுகின்றது. ஊதா நிற வெளிப்பாட்டுக்கு அத்தியாவசியமான சேர்வைகளை **A** மற்றும் **b** ஆகிய இரு எதிருருக்களும் குறியீடு செய்கின்றன. எனவே இரண்டு அட்சியான எதிருருக்களும் **(A** மற்றும் **B)** இருக்கும்பொழுது மாத்திரமே ஊதா நிறம் தோன்றும்.

எந்தவொரு தானத்திலும் உள்ள இரட்டைப் பின்னிடைவான பிறப்புரிமையமைப்பும் **(AAbb, aaBB Aabb** அல்லது **aabb)** உஊதா நிறம் வெளிப்படுதலை மறைப்பதன் மூலம் வெள்ளைப்பூக்களைக் கொடுக்கும் மேலேயுள்ள ஏதாவதொரு தானத்திலுள்ள இரட்டைப் பின்னடைவான பிறப்புரிமையமைப்பு ஒன்றில் சமநுகமுள்ள ஆட்சியான நிலைமைக்கு **(AA** மற்றும் **BB)** அல்லது இதரநுகமுள்ள நிலைமைக்கு **(Aa** மற்றும் **Bb)** மேலாட்சியுள்ளதாக இருக்கும். **(AAbb, Aabb, aaBB, aaBb** - மற்றும் **AaBb, AaBB, AABb, AABB-** ஊதா) உரு 6.13

**F1** சந்ததியின் எல்லாத் தாவரங்களும் இரண்டு தானங்களிலும் **(AaBb)** இதரநுகமுள்ள நிலைமையைக் கொண்டுள்ளதால் ஊதா நிறப்பூக்களை வெளிப்படுத்தின.

**F2** சந்ததியில், **A** மற்றும் **B** எதிருருக்களோடு (9∴16) கூடிய பிறப்புரிமையமைப்பைக் கொண்ட தாவரங்கள், ஊதா நிறப் பூக்களை வெளிப்படுத்துகின்றன. அத்துடன் **'aa'** மற்றும் ஒரு **'B'** எதிருரு (3∴16) அல்லது **'A'** எதிருரு மற்றும் **'bb'** எதிருருக்களை பிறப்புரிமையமைப்புக்களாகக் கொண்ட தாவரங்களும் **'aabb'** பிறப்புரிமையமைப்பு (1∴16) உம் வெள்ளைப் பூக்களை உற்பத்தி செய்கின்றன. இவ்வாறு இரண்டு தோற்றவமைப்புக்குரிய வகுப்புக்கள் மாத்திரம் - ஊதா மற்றும் வெள்ளை, வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு மென்டலின் தத்துவங்களின் படியான 9:3:3:1 என்ற துவிக்கலப்புபிறப்பு தோற்றவமைப்பு விகிதமானது **F2** சந்ததியில் 9:7 என்ற விகிதங்களுக்கு மாற்றப்படுகின்றது.




உரு. 6.13. பின்னிடைவான மேலாட்சிக்கு ஒரு உதாரணம்
சிவப்பு பட்டாணித் தாவரத்தின் பூ நிறம்

தொடர்ச்சி... (பக்கம் -14)


## கணிதம்

**திரு.எஸ்.சிவரூபன், ஆசிரியர், மட் / மமே/வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம்.**

### பின்னங்கள்

❖ உருக்களில் நிழற்றிய பகுதியைப் பின்னமாகக் காட்டுதல்

உரு 1 உரு 2 உரு 3



(1) உரு 1இல் சமபகுதிகள் 2. அவற்றுள் நிழற்றிய பகுதி 1. இங்கு நிழற்றிய பகுதி, இரண்டில் ஒன்று. இதைப் பின்னத்தில் எழுதினால் $\frac{1}{2}$

(2) உரு 2இல் சமபகுதிகள் 4. அவற்றுள் நிழற்றிய பகுதி 3. இங்கு நிழற்றிய பகுதி, நாலில் மூன்று. இதைப் பின்னத்தில் எழுதினால் $\frac{3}{4}$

(3) உரு 3இல் சமபகுதிகள் 6. அவற்றுள் நிழற்றிய பகுதி 2. இங்கு நிழற்றிய பகுதி, ஆறில் இரண்டு. இதைப் பின்னத்தில் எழுதினால் $\frac{2}{6}$

- பின்னமொன்றில் கோட்டுக்குக் கீழ் உள்ள எண், **பகுதி எண்** என்றும் கோட்டுக்கு மேலே உள்ள எண், **தொகுதி எண்** என்றும் அழைக்கப்படும்.
- பின்னங்களின் தன்மையைப் பொறுத்து, அவை வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படும்.

1) தொகுதி எண் 1ஐக் கொண்ட பின்னமானது **அலகுப் பின்னம்** ஆகும்.

(உ-ம்) : $\frac{1}{2}$ , $\frac{1}{4}$ , $\frac{1}{5}$ , $\frac{1}{100}$

2) பகுதி எண்ணிலும் தொகுதி எண் சிறிதாயுள்ள **பின்னமானது முறைமைப் பின்னம்** ஆகும்.

(உ-ம்) : $\frac{1}{2}$ , $\frac{3}{4}$ , $\frac{4}{8}$ , $\frac{20}{100}$

3) பகுதி எண்ணிலும் தொகுதி எண் பெரிதாயுள்ள பின்னமானது **முறைமையில்லாப் பின்னம்** ஆகும்..

(உ-ம்) : $\frac{3}{2}$ , $\frac{7}{4}$ , $\frac{15}{10}$ , $\frac{65}{50}$

4) ஒரு முழு எண்ணும் முறைமைப் பின்னமும் கொண்ட பின்னமானது **கலப்புப் பின்னம்** ஆகும்.

(உ-ம்) : $4\frac{1}{2}$ , $5\frac{1}{3}$ , $2\frac{3}{5}$ , $3\frac{2}{3}$

❖ கலப்புப் பின்னத்தை முறைமையில்லாப் பின்னமாக மாற்றுதல்.

(1) $$4\frac{1}{2} = \frac{(2 \times 4) + 1}{2} = \frac{8+1}{2} = \frac{9}{2}$$

(2) $$5\frac{3}{4} = \frac{(4 \times 5) + 3}{4} = \frac{20+3}{4} = \frac{23}{4}$$

பக்க அனுசரணை

IN LUMINE TUO LUMEN

மட்டக்களப்பு,
மெதடிஸ்த மத்திய கல்லூரி
பழைய மாணவர்கள் சங்கம்
பிரித்தானியா.

# கற்போம்

## அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 47

### க.பொ.த. (சா/த) – தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

புதிய பாடத்திட்டத்துக்கமைவாகத் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்துக்கான முதலாவது பரீட்சை 2016இல் நடைபெற்றது. நாம் 2016இல் நடைபெற்ற பரீட்சைக்குரிய வினாத்தாளில் மரபுத்தொடர் தொடர்பாக வந்த இரண்டு வினாக்களையும் எடுத்துக்காட்டுக்காக இங்கே பார்ப்போம்.

11. நியாயம் கேட்டல் என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்
(1) தட்டிப்பேசுதல் (2) தட்டிப்பார்த்தல் (3) தட்டிக்கேட்டல் (4) தட்டிக்கொடுத்தல்

12. 'எப்படியும் வெளிநாடு செல்ல வேண்டும் என்று அவன் ஒற்றைக்காலில் நிற்கிறான்' – 'ஒற்றைக்காலில் நிற்றல்' என்ற மரபுத்தொடரின் பொருள்
(1) பலமற்று நிற்றல் (2) பிடிவாதமாக நிற்றல் (3) உறுதியற்று நிற்றல் (4) ஆசைப்படுதல்

- இவ்வாறு 2017இல், 2018இல், மரபுத்தொடர் தொடர்பாக வந்த வினாக்களையும் கவனத்திற்கொள்ளுங்கள்.
- இங்கு வந்த வினாக்களைக் கவனியுங்கள்.

(1)மரபுத்தொடரின் கருத்துத் தரப்பட்டு, அக்கருத்தை உணர்த்தும் மரபுத்தொடரை இனங்காணுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(2)மரபுத்தொடர் தரப்பட்டு, அம்மரபுத்தொடர் உணர்த்தும் கருத்தை இனங்காணுமாறு கேட்கப்பட்டுள்ளது.

•ஒரு மரபுத்தொடருக்கு ஒத்த இன்னொரு மரபுத்தொடரை இனங்காணும் ஆற்றலையும் பெற்றிருப்பது நல்லது.

01. 'நிலைபெறுதல்' என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்
(1) காலூன்றுதல் (2) கைவைத்தல் (3) அடிப்போடுதல் (4) ஆரம்பித்தல்

02. 'வயதுக்கு மீறிய செயற்பாடு' என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்
(1) மதியாத்தன்மை (2) எதிர்த்துப்பேசுதல் (3) வாய்காட்டுதல் (4) பிஞ்சிற்பழுத்தல்

03. 'கெட்டழிந்து போதல்' என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்
(1) கசக்கிப்பிழிதல் (2) குட்டிச்சுவராகுதல்(3) அடியோடழிதல் (4) ஆட்டம்காணுதல்

04. 'ஒருவரின் குற்றங்குறைகளைப் பகிரங்கப்படுத்தி பழிப்பிற்கு இடமாக்கல்' என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்
(1) சந்திக்கிழுத்தல் (2) சீட்டுக்கிழித்தல் (3) அவமானப்படுத்தல் (4) நாசம்செய்தல்

05. 'தனக்குரியதைப் பிறருக்குத் தானமாகக் கொடுத்துவிடல்' என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்
(1) அள்ளியிறைத்தல் (2) மண்ணாக்குதல் (3) தாரைவார்த்தல் (4) கரைத்துக்குடித்தல்

06. 'அடிவிளக்குதல்' என்னும் மரபுத்தொடரின் பொருள்
(1) விளக்கின் அடிப்பாகத்தைப் பூசிக்க கழுவுதல்
(2) தனது வம்சத்தைப் புகழ்பெறச் செய்தல்
(3) ஒருவரின் காலடியை விளக்குதல் நல்லது
(4) அடியை விளக்காதுபோனால் நுனி பழுதாகும்

07. 'நாக்குவளைத்தல்' என்னும் மரபுத்தொடரின் பொருள்
(1) நாக்கு வளைத்துப் பல்லுத்தீட்டுதல் (2) நன்றாக ஒருவரை வாழ்த்துதல்
(3) ஒருவரைப் பழித்துப் பேசுதல் (4) நாக்கால் வித்தை காட்டுதல்

08. 'முதலைக்கண்ணீர்' என்னும் மரபுத்தொடரின் பொருள்
(1) முதலை கடித்தால் கண்ணீர் வருதல் (2) விடாமல் கண்ணீர் வடித்தல்
(3) அதிகமாகக் கண்ணீர் வடித்தல் (4) பாசாங்கு செய்தல்

09. 'வயிறு கிள்ளுதல்' என்பதை ஒத்த இன்னொரு மரபுத்தொடர்
(1) வயிறு நிறைதல் (2) வயிறுகடித்தல் (3) வாய்விடுதல் (4) வயிறு வளர்த்தல்

10. 'அடிபிறக்கிடல்' என்பதை ஒத்த இன்னொரு மரபுத்தொடர்
(1) புறமுதுகிடல் (2) அடிதொழுதிடல் (3) வணங்குதல் (4) அச்சப்படல்

தொடர்ச்சி...

## விஞ்ஞானம்

பல்பரம்பரையலகுப் பாரம்பரியம் (தலைமுறையுரிமை) **(polygenic inheritance)**
இரண்டு அல்லது கூடுதலான பரம்பரையலகுகளின் கூட்டத்தகவுடைய வெளிப்பாட்டின் பெறுபேறாகத் தோன்றும் அளவறியியல்புகளான உயரம், தோலின் நிறம், போன்ற தோற்றவமைப்புக்குரிய தொரு இயல்பின் தலைமுறையுரிமை பல்பரம்பரையலகுத் தலைமுறையுரிமை எனப்படும்.

உ.ம். மனிதரில் தோலின் நிறம் பல பரம்பரை அலகுகளால் தீர்மானிக்கப்படுகின்றது. எளிதாக விளங்கிக் கொள்வதற்கு மூன்று இயல்புகள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு பரம்பரையலகும் **(A,B** அல்லது **C)** தோற்றவமைப்புக்குக் கறுப்புத் தன்மையை வழங்கும் ஒரு 'அலகை' வழங்கும் கறுப்புநிறத் தோலிற்கான ஒரு எதிருருவைக் கொண்டிருப்பதுடன், அது மற்றைய எதிருருவிற்கு **C**, **a** அல்லது **C)** நிறைவற்ற ஆட்சியுடையதாகக் காணப்படும்.
**AA,BB,CC** நபர் - மிகக் கருமையான தோல்
**aa,bb,cc** நபர் - மிகவும் வெளிறிய தோல்
ஏனெனில் பல்வேறு தானங்களிலிருந்தும் ஆட்சியான எதிருருக்கள் தோலின் நிறத்தின் மீது ஓர் கூட்டத்தகவுத் தாக்கத்தைக் கொண்டிருப்பதே காரணமாகும்.


ஒரு பல்பரம்ரையலகுக்குரிய இயல்பைத் தீர்மானிப்பதில் சம்பந்தப்பட்டுக் காணப்படும் பரம்பரையலகுகளினது எண்ணிக்கையின் அடிப்படையில் தொன்றல்களில் தோற்றவமைப்புக்குரிய மற்றும் பிறப்புரிமையமைப்புக்குரிய சேர்க்கைகள் மாறுபடலாம். குடித்தொகுயைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு பல்பரம்பரை இயல்புக்கான தரவு **(data)** ஓர் பொதுவான வழங்கல் வளைவைத் **(Normal distribution curve)** தரலாம். எச்சங்களின் பெரும்பகுதி உடனடியான தோற்றவமைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும். (இடையான வீச்சில் தோலின் நிறம்)

பிறப்புரிமையியலுக்குரிய இணைப்பு **(Genetic linkage)**
குறித்த இயல்புகளைக் குறியீடு செய்யும் சில பரம்பரையலகுகள் ஒரே நிறமூர்த்தத்தில் அதுவும் குறைந்ததொரு தூரத்தில் அமையப்பெற்றிருக்கும். இவ்வாறு **it** புணரியாக்கத்தில் கலத்தின் ஒடுக்கற்பிரிவின்போது நடைபெறும் குறுக்குப்பரிமாற்றத்திலிருந்தும் சுயாதீன தன்வயத்த தொகுப்புக்களில் இருந்தும் தப்பி ஒன்றாகவே தலைமுறையுரிமையடைகின்றன. மேற்படி தோற்றப்பாடு பிறப்புரிமையியலுக்குரிய இணைப்பு என அழைக்கப்படுகின்றது.
உ.ம். **Drosophila** பழ ஈயின் உடலின் நிறம் மற்றும் சிறகின் பருமன் ஆகியவற்றின் தலைமுறையுரிமை.

**Drosophila** வில் வான் வகை ஈக்கள் சாம்பல் நிற உடல்களையும் சாதாரண பருமனையுடைய சிறகுகளையும் கொண்டு காணப்படுகின்றன. மேற்படி இயல்புகளுக்கான விகாரம் காரணமாக, உடலின் நிறம் கறுப்பாக வர, சிறகுகள் பதாங்கமடைகின்றன. இரு இயல்புகளுமே தன்மூர்த்தங்களுக்குரிய நிறமூர்த்தங்களின் பரம்பரையலகுகளால் தீர்மானிக்கப்படுகின்றன.

இந்த உதாரணத்தில் விகாரி எதிருருக்கள் வான் வகை எதிருருக்களுக்குப் பின்னிடைவாக உள்ளன. உடலினது நிறங்களுக்கான எதிருருக்கள் **G** (சாம்பல்) எனவும் **g** (கறுப்பு) எனவும் காட்டப்பட்டுள்ளன. சிறகின் பருமன் **N** (சாதாரணமானது) ஆகவும் **n** (பதாங்கத்துக்குரியது) எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

மேலுள்ளதைப் பரிசோதிப்பதற்காக, வான் வனை ஈக்கள், உடலின் நிறத்துக்கும் சிறகின் பருமனுக்கும் விகாரிகளாகக் காணப்பட்ட ஈக்களுடன் இனங்கலக்கப்பட்டு, ஒரு தவிக்கலப்புப்பிறப்பு சோதனை இனக்கலப்பினால் பின்தொடரப்பட்டது.




உரு 6.14. மெண்டலின் தத்துவங்களின் பிரகாரம் பழ ஈயான Drosophila வின் உடல் நிறம் மற்றும் சிறகின் பருமன் ஆகியவற்றின் தலைமுறையுரிமைக்கான எதிர்வு கூறல்

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## மலையகமும் நல்லாட்சியும்.............

ஒற்றையடி பாதையில் சென்றால் ஒருபோதும் திரும்பி வர முடியாது என்கின்ற சாதாரண உண்மையைக்கூட புரிந்து கொள்ளமுடியாதவர்களாக நாமிருக்கின்றோம்.

இந்த அரசாங்கத்தில் 84 அமைச்சர்கள் இருக்கின்றனர். அமைச்சரவை அந்தஸ்துள்ள 45 அமைச்சர்களும், 19 இராஜங்க அமைச்சர்களும், 20 பிரதியமைச்சர்களும் இதில் அடங்குவர். அதனடிப்படையில் மலையக மக்கள் சார்பிலான உறுப்பினர்களில் ஒருவர் இராஜாங்க அமைச்சராகவும் மூவர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாகவும் பதவி வகிக்கின்றனர். மலையகத்துக்கு அமைச்சர்கள் உண்டு, முஸ்லிம்களுக்கு அமைச்சர்கள் உண்டு, வடக்கு தமிழர்களுக்கு ஒரு அமைச்சராவது உண்டு. வியஜகலா மகேஸ்வரனை வடக்கில் யாரும் துரோகி என்று சொல்வதில்லை. ஆனால் கிழக்கு தமிழர்கள் மட்டுமே எவ்விதமான அமைச்சர்களும் இன்றி வாழவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். இதற்கு காரணம் என்ன அதிகாரத்தில் பங்கெடுப்பதற்குத்தானே மக்கள் வாக்களிக்கின்றனர். ஆனால் நாம் தமிழர்களின் ஒற்றுமையின் பெயரில் அளித்து வரும் வாக்குகள் ஊடாக வெறும் 'சோலைக்காட்டு பொம்மைகள்' போன்ற எம்பிக்களை மட்டுமே உருவாக்கி வைத்துள்ளோம்..

மலையகத்தில் இதுவரைகாலமும் ஆங்கிலேயர்காலத்து அடிமை சின்னமான லயங்களே கதி என்று கிடந்தவர்களுக்கு ஒரு அங்குல நிலம் கூட சொந்தம் கிடையாது. ஒரு அறையை மட்டும் கொண்ட அந்த லயங்களுக்குள்தான் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வாழ்கின்றனர், உண்ணுவதும் உறங்குவதும், உடை மாற்றுவதும் கூட அங்குதான். வயது வந்த பிள்ளைகளுக்கும் இதே நிலைதான். அந்த லயங்களுக்குள் பிரதேச சபைகள்கூட மூக்கு நுழைக்க முடியாத அளவுக்கு தோட்ட துரைமாரின் முழு அதிகாரங்களுக்குள் முடங்கி கிடந்தன. ஆனால் அண்மையில் 1987ஆம் ஆண்டு பிரதேச சபை சட்டத்தை திருத்தி 2018ஆம் ஆண்டு 30 தாம் இலக்க சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதன் ஊடாக அந்த லயங்கள் தேசிய ரீதியில் இப்போதுதான் முதன்முதலாக நாட்டில் ஒரு அங்கமாக உள்வாங்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் உருவாக்கப்பட்ட பெருந்தோட்ட பிராந்திய அதிகார சபையின் உருவாக்கமும் இன்று அங்கே உருவாக்கப்பட்டுவரும் நூற்றுக்கும் மேற்பட்ட புதிய கிராமங்களின் தோற்றமும் குறிப்பிடத்தக்க சாதனைகளாகும். இந்த புதிய கிராமங்கள் என்பன நமது பகுதிகளை போலன்றி வரலாற்றிலேயே ஓரடி நிலம் கூட சொந்தமாக வைத்திராத மலையக மக்களுக்கு பெரும் வரப்பிரசாதங்கள் ஆகும். இதுவரை 5000-6000 வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் நான்கு புதிய பிரதேச சபைகளை உருவாக்கியமை, தேசிய ஆட்பதிவு திணைக்களத்தின் கிளை காரியாலயத்தை அமைத்தமை, தேசிய அடையாள அட்டைகளில் மலையக வம்சாவளி மக்களை வேறு படுத்தி அடையாளம் கட்டி வந்த 'X' என்னும் அடையாளத்தை நீக்கி எல்லாவித இலங்கையருக்கும் உரிய அந்தஸ்தை மீட்டெடுத்தமை, பெருந்தோட்ட சுகாதார சேவைகளை தேசிய சுகாதார முறைமைக்குள் முதன்முறையாக உள்வாங்க வைத்தமை,

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு என 1996ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டுவந்தபோதிலும் 2009ஆம் ஆண்டு அந்த அமைச்சு இல்லாமலாக்கப்பட்டமை. அதனை மீண்டும் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சு என்கின்ற பெயரில் உருவாக்கியமை, இப்போது தோட்டமோ தோட்டக்காட்டானோ அல்ல மலைநாடு மலைநாட்டு மக்கள் என்கின்ற தொனிக்கு அரச அங்கீகாரம் பெற்றுத்தந்தமை என்று பலவிதமான வளர்ச்சிகளை இன்று மலையகம் கண்டு வருகின்றது.

வெறும் ஆறோ ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு அவர்களால் குறித்த நான்காண்டுகளுக்குள் இத்தனையையும் சாதிக்க முடியுமானால் நம்மால் அது ஏன் முடியாமல் போனது. இந்த நல்லாட்சி நமக்கு பெற்றுத்தந்தனென்ன?

தொடர்ச்சி...

## ஒரு வருடத்....

போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் இதுவரை ஐவர் மரணமடைந்துள்ளமையால் நேற்றைய தினத்தை அவர்கள் துக்க தினமாக அனுஷ்டிப்பதாக இக்காணி மீட்புப் போராட்டத் தலைவி புஞ்சுமாத்தையா ரங்கத்தனா தெரிவித்தார்.

இக்கிராம மக்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வெளிப் பிரதேசங்களில் அகதிகளாக வாழ்ந்த நிலையில் 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் தங்களின் காணிகளுக்குச் செல்வதற்கான அனுமதிகளைக் கோரியபோது வனபரிபால திணைக்களத்துக்கும் மக்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டு அனுமதிகள் வழங்கப்படாது இழுத்தடிப்புச் செய்யப்படுவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

அரசியல்வாதிகளின் உறுதிமொழிகள் செல்லாக்காசாகவே இருப்பதாகத் தெரிவித்த அவர், பிரதேச செயலாளர் அரசாங்க அதிபர் ஆகியோர் தமது கோரிக்கைக்கு செவிசாய்த்து வருகின்ற போதிலும் வனபரிபாலன திணைக்களமே இடையூறு செய்வதாகத் தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்க அதிபர் மட்டத்தில் காணிகளுக்கான ஆவணங்கள் பரிசிலிக்கப்பட்டுள்ளதாகவும் பொத்துவில் பிரதேச செயலகத்தால் 172 பேரின் பெயர் பட்டியல் ஒன்றும் வெளியிடப்பட்டுதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தாம் இங்கு வாழ்ந்தமைக்கான சகல ஆவணங்களும் இருக்கின்ற போதிலும் பல்வேறுபட்ட சாட்டுப்போக்குகளை அரசாங்கம் கூறிக்கொண்டு தம்மை தொடர்ந்தும் அதிகளாக வீதி ஓரத்தில் வைத்து வேடிக்கைப் பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தாம் வாக்களித்துத் தெரிவுசெய்த அரசியல்வாதிகள் ஒருவருடமாகியும் இன்னும் தமது பிரச்சினையைத் தீர்த்துவைக்காமல் கதையளந்துகொண்டிருப்பதாகவும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

தொடர்ச்சி...

## சனாதிபதித் தேர்...

நோக்கி நகர்வதற்கான அரசியல் அணுகுமுறையினைப் பின்பற்றுதல் வேண்டும்.

ஆகவே குறிப்பாக கிழக்குத் தமிழர்கள் இந்த சனாதிபதித் தேர்தலில் தங்களுக்கு ஒரு தற்காலிக தீர்வையாவது தரக்கூடிய வேட்பாளரை தெரிவு செய்யப் போகின்றார்களா அல்லது நிரந்தரத் தீர்வு எனும் மாயவலையில் மூழ்கி சிக்குண்டு எதுவும் இல்லாது கிழக்கையும் இழக்கப் போகின்றார்களா என்பதை தெரிவு செய்யவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

தொடர்ச்சி...

## இமாலய சாதனை....

கன்னித்தமிழ் என்றெல்லாம் பெயர். அவைகளில் கன்னித்தமிழை கடுமையாக காதலிப்பவன் நான் அதனால்தான் இன்றும் இளமையாக இருக்கிறேன். என்றார்.

மட்டக்களப்பு கல்லடி பிரசாரக் கூட்டத்தில் நான் அறிந்த சம்பவத்தையும் இங்கு கூறிவைக்கின்றேன். பிரசாரக் கூட்டத்தில் பேச்சாளர் ஒருவர் பேசிக் கொண்டு இருக்கும் போது. கூட்டத்தைக் குழப்புவதற்காக எதிராளிகள் கற்களை வீசினர். பேச்சாளர் பேச்சை நிறுத்தி விட்டு இராஜதுரையைப் பார்த்தார். உடனடியாக இராஜதுரை துள்ளியெழுந்து ஒலி வாங்கிக்கு முன் எழுந்து நின்றார். நான் இங்கு வந்தபோது மலர் மாலைகள் சூட்டி மகிழ்ந்தீர்கள். இப்போது இவ்வூரின் பெயருக்கு ஏற்றாற் போல் வரவேற்பு கிடைத்தது. உங்கள் ஊரின் பெயர் கல்லடி. கல்லால் அடி அந்த கல்லடி இப்போதுதான் கிடைத்தது. நாங்கள் சொல்லடியும் கல்லடியும் பெற்று வளர்ந்தவர்கள். இக்கற்களைக் கண்டு அஞ்சமாட்டோம். நாங்கள் காக்கைகள் கூட்டமல்ல கல்லெறிந்தால் கலைந்து செல்ல. இது தமிழ் உணர்வு கொண்ட கூட்டம். உங்களுக்கு நெஞ்சில் துணிவிருந்தால் நேரே வந்து எறியுங்கள் பார்க்கலாம் என்றார். நிலைமை அமைதி நிலைக்கு வந்தது. தொடர்ந்து கூட்டம் நடுநிசி வரை நடைபெற்று முடிந்தது.

இராஜதுரையின் வாழ்வு நிரலைப் பார்த்தால் எதிலும் முதலாவது இடத்தில்தான் இருக்கிறார். மட்டக்களப்பின் தமிழரசுக்கட்சியின் முதல் பாராளுமன்றப் பிரதிநிதி. இரட்டை அங்கத்தவரில் முதல் பிரதிநிதி. முன்பு நான் சிறுவனாக இருக்கும் போது இவரையார்? என்று என் தந்தையிடம் கேட்பேன். தந்தை சொல்வார். இவர்தான் மட்டக்களப்பின் முதல் எம்.பி என்று. இக்கூட்டத்துக்கு வரும்போது என் மகன் கேட்டான். இவர் யாரப்பா என்று. நான் மகனுக்குச் சொன்னது. இவர் மட்டக்களப்பில் முதல் எம்.பி. இதுமட்டுமல்ல மட்டக்களப்பு மாநகரசபையின் முதல் மேயர். ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அரசியல் சட்டம் இவருக்காக மாற்றப்பட்டது. அரசியல் சட்டமே மாற்றப்பட்ட முதல் நபர் இவர். இந்து சமயத்தின் முதல் அமைச்சர் இவர். இப்படி பலவற்றில் முதலாவதாக இருப்பவர் இவர். இவரிடம் இருந்த முதல். மக்களின் அன்புதான். அந்த முதலால்தான் இப்படியான முதல்களைப் பெற்றுக் கொண்டார். எனக் கூறி நேரம் போதாமை காரணமாக என் பேச்சை இத்தோடு முடிக்கிறேன். நன்றி! வணக்கம்.

தொடர்ச்சி...

## கணக்காளரும் இல்.....

இரவோடிரவாக வெடியும் கொழுத்தப்பட்டது. உண்மையில் உண்ணாவிரதம் இடம்பெற்றது பிரதேசசெயலக தரமுயர்த்தலுக்கே அன்றி கணக்காளரைப்பெறுவதற்காக அல்ல. ஆனால் இதுவரை தற்காலிக கணக்காளரோ நிரந்தரக்கணக்காளரோ யாரும் கல்முனைக்கு வரவில்லை. கணக்காளர் கதைகூட தற்போது பேசப்படுவதில்லை.

அதன் பின்னர் கடந்தவாரம் கொழும்பில் சரமாரியாக இரு தலைமைகளும் பேச்சுவார்த்தையிலீடுபட்டதாக கூறப்பட, ஓரிருவாரங்களில் விட்டுக்கொடுப்புடன் தீர்வுகாணப்பட்டுவிடும் என அமைச்சர் வஜிர தெரிவித்திருந்தார்.அதாவது கல்முனை வடக்கு பிரதேசசெயலகம் சில விட்டுக்கொடுப்புகளுக்கு மத்தியில் தரமுயர்த்தப்படுகிறது என்ற மற்றுமொரு செய்தி பரவலாக அடிப்பட்டது.கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சரவையில் பத்திரம் தாக்கல்செய்யப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்றும் உள்ளுர்அரசியல்வாதிகள் மக்களிடம் கூறினர்.தற்போது அந்தக்கதைகூட கதைபடாமல் தீர்வுத்திட்டம் புதிய அரசியலமைப்புபற்றி பேசப்படுகிறது.

மொத்தத்தில் கணக்காளரும் இல்லை தரமுயர்த்தலும் இல்லை. சம்பந்தப்பட்ட தலைமைகள், உறுப்பினர்களும் மௌனியாகிவிட்டதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கிக்கின்றனர்.

## எரியும் வைக்கோல்!

வயிரமுத்து துசாந்தன்

பத்து திங்கள் சுமந்து
பக்தியோடு வளர்த்து
பண்புடன் பேசவைத்து
பணிவுடன் நடக்க வைத்து

பண்டைத் தொழில் விவசாயம்
பருகும் நீரையும் கொண்டு
பகல் இரவாக கண்விழித்து
பகட்டாக செய்யக்கற்றுக்கொடுத்து

படுக்கை தவிர்த்து
பயிர் அறுவடைசெய்து
பஞ்சம் தவிர்க்க – நெல்லை விற்று
பணத்தையும் பெற்று

பழமை மறந்து
பரவிக்கிடக்கும் வைக்கோல்
பதப்பட்டு நெல்வயலிலே
பசளையாக விடாமல்

படும் துன்பம் அறியாது
பட்ட கஸ்டம் உணராது
படித்த அறிவையும் பயன்படுத்தாது
பட்டறிவையும் செயற்படுத்தாது

பரண் அமைக்க பயன்படுத்தாது
பறவைக்கும், மிருகத்திற்கும் உணவு
கொடுக்காது
பலகாலம் வாழும் மண்புழுவிற்கும் இரை
வழங்காது – வைக்கோலை
பற்றி எரிக்கின்றனர் மானிட ஜடங்கள்

பன்னாடைகளாய் சில மனிதர்கள்
பரந்த உலகிலே
பரதேசிகளாய் வாழ்கின்றனர் - இதனால்
பயன்படா பொருளாய் வைக்கோல்
எரிகிறது!

# அக்கினி புலையவெளி

## உணவு உற்பத்திப் பொருட்கள்

### சைவ முறையில் தயாரிக்கப்பட்டது

AGNI PULAYAVELY INDUSTRIES

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர் ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

## தொலைபேசி இல:- 0771516203

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு



## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

1 கிலோ 400ரூபாய்

## மிக்சர்

1 கிலோ 400ரூபாய்



எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa